ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:



ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 13 } ஜய ௵ வைகாசி ௴ { ஸஞ்சிகை 5

'அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பித ஸந்நிதாநம் |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ||'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா |
ஸ்ரீ ந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ||

ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் |
ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ||

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

योन्तःप्रविश्य ममवाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरस्स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरण श्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

"ब्राह्मणेन निष्कारणेन षडङ्गो वेदोऽध्येयो ज्ञेयश्च" என்பது மஹர்ஷிகளின் வாக்யம். வேதபுருஷனால் விதிக்கப்பட்ட கருத்துக்களைத்தான் மஹர்ஷிகளும் பிற்காலத்தில் வற்புறுத்தினார்கள். ஸ்வகர்மப்ரேரிதனான ஜீவன் இவ்வுலகில் கரண களேபரங்களுடன் தோன்றினவுடன் தான் செய்யவேண்டியது என்ன? எனத்தெரியாமல் திகைக்கிறான். அதுஸமயம் தான் பகவத்வாக்யங்களாகிய விதி நிஷேதங்கள் அவனுக்குப்புலப்படுகின்றன. ஜீவன் நற்கதியை அடைய வேண்டுமென்றே ச்ரிய:பதி இம்மாதிரியான பேருபகாரம் நமக்குச்செய்தருளினான். பகவத் ஸ்ருஷ்டிகாலத்தில் ஜகத்தில் தோன்றிய பல ஜீவன்களுக்கும்பரம்பொருளிடம்நம்பிக்கையும், தன் க்ஷேமத்தில் ஆவலும் இயற்கையாகவே இருந்தன. ஆதலால் மஹர்ஷிகளின் வாக்யங்களை ஆப்தவாக்யங்களாகவே கருதி சட்டளைப்படியே நடந்து வந்தார்கள். வேதவாக்யங்களில் நம்பிக்கைக்குறைவென்பதே நினைப்பதற்கில்லை. மஹர்ஷிகளின் வாக்யங்களிலும் அதேமாதிரி கௌரவம் இருந்தது.

ஆனால் கர்மபூமியான இவ்வுலகில் அநாதி காலம்பழகியவுடன் ஜீவன்களுடைய குணத்திலும் மாறுதல் உண்டாகும் என்று மஹர்ஷிகளுக்குத்தெரியாமல்போகுமா. த்ரிகாலஜ்ஞானிகளுக்குப் புலப்படாத விஷயங்கள் உண்டோ?. ஆதலால் காலக்ரமத்தில் பக்தியின் ச்ரத்தைக் குறைவை அவர்கள் எதிர்பார்த்து அதைத் தடுக்கவும் அணை கோலியுள்ளார்கள். மநுஷ்யர்களுடைய அறிவுத்திறன் அளவிடக்கூடியதும் குறையக்கூடியதுமே. ஆதலால் காரணம் கேட்காமலேயே சொன்னதைச் செய்யவேண்டும் என விதித்தார்கள். இவ்விதிகளையும் அக்காலத்தவர்கள் ஒப்புக்கொண்டார்கள். ஆதலால் ஸமூஹத்தில் பெரும்பாலும் அமைதி நிலவியது.

நாளடைவில்உலகமக்களிடம் சொன்னதைச் சொன்னபடி கேட்பது என்ற வழக்கம் மாற ஆரம்பித்தது. இந்தமாறுதலின் அடிப்படைக் காரணம் என்ன? மனிதன் தன் அறிவில் அதிக நம்பிக்கைக் கொள்ள ஆரம்பித்தான். பிறர் சொன்னதைக் கேட்பதைவிட தான் தீர யோசித்துச் செய்யவேண்டும் என்ற எண்ணம்மனிதனுடைய அஹங்காரத்தினால் ஏற்படுவதுதான். அஹந்தையால் எவரும் முடிவில் க்ஷேமத்தை அடையமுடிவதில்லை. அழிவைத் தான் தேடிக்கொள்வார்கள்.

உலகில் எந்ததேச சரித்திரத்தையும் ஊன்றிப்பார்த்தால், எதுவரை மனிதன்பெரியோர்களின் ஆஜ்ஞைப்படி நடந்தானோ அதுவரை க்ஷேமத்துடன் இருந்ததாகவும், என்று தன் சொந்த அறிவை உபயோகித்து நல்லது, கெட்டது என்று பகிர்ந்துகொள்ள ஆரம்பித்தானோ அதுமுதல் நாசத்திற்கு அடிக்கோல ஆரம்பித்தான் என்பதும் தெளிவாகும். இதனால் ஸ்வபுத்தியை உபயோகிக்கவே வேண்டியதில்லை எனக்கூறுவதாக எண்ணவண்டாம். எந்தவிஷயத்தில் நாம் ஆராய்ந்து பார்க்கமுடியுமோ அந்த விஷயத்தைஊன்றிப்பார்க்கலாம். எந்த விஷயத்தை நாம் ஆராய்ந்து பார்க்கமுடியாதோ அந்த விஷயத்தை நாம் ஆராய்ந்து ஸரியில்லாத முடிவை ஏற்றுக்கொள்வதைவிட

'इदं कुरु,(இதைச்செய்)'इदं माकुरु,(இதைச்செய்யாதே) என்ற உயர்ந்த புராதனக் கொள்கைகளையே ஒப்புக் கொண்டு அதன்படியே நமது வாழ்க்கையை சீர்படுத்திக்கொள்வது நல்லது.

உலகத்தில் காணப்படும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும்காரணங்களைச்செவ்வனேநாம் அறிந்துகொள்ள முடியாது. அறிந்துகொள்ளமுயற்சிக்கவும் வேண்டியதில்லை. உதாரணமாக ராஜீய வ்யவஹாரமன்றங்களில் அங்கத்தினர்கள் சில கேள்விகளைக்கேட்கும் ஸமயங்களில், அதிகார வர்கத்தினர்களின் பதில்கள் நமது ஸித்தாந்தத்தை வலியுறுத்தும். நாட்டின் நலனை உத்தேசித்து அக் கேள்விகளுக்கு விடையளிப்பதோ, அல்லது மௌனத்தின் காரணங்களை வெளிப்படையாகக் கூறுவதோ இயலாது என்கிறார்களல்லவா?.

இப்படி நாட்டின் நலனுக்காகக் கூறும்போது உலகின் நலனுக்காக பகவானாலும் பக்தச்ரேஷ்டர்களாலும் கூறப்பட்ட கருத்துக்களின் காரணங்களை நாம்ஆராய்ந்து பார்த்தலைத் தவிர்க்கவேவேண்டும்என்பதில் என்னகுறைவு காணமுடியும்?.

இம்மாதிரியான குறைவுபாடுகளை மனத்திற்கொண்டுதான் காரணத்தை எதிர்பாராமலேயே வேதாத்யயனம் செய்தல் வேண்டும் எனக்கூறியுள்ளார்கள். வேதம் மாத்திரம் அத்யயனம் செய்யத்தகுந்தது எனக்கூறவில்லை. शिक्षा, कल्पं, निरुक्तं, ज्योतिषं, छन्दः, व्याकरणम् என்ற ஆறு அங்கங்களோடு கூடிய வேதத்தை அத்யயனம்செய்யவேண்டும் எனக்கூறினார்கள். வேதாத்யயனம் செய்து, அந்த வாக்யங்களின் கருத்துக்களை நன்கறிந்து, அதில் கூறப்பட்டபடி நடைமுறையில்அநுஷ்டிக்கவேண்டும்என்ற எண்ணத்தினால் அங்கங்களோடு அத்யயனம் செய்தால், நாளடைவில் அநுஷ்டித்துக்காட்ட முடியும் என்ற உண்மையை அவர்கள் நமக்கு உபதேசமூலமாக எடுத்துரைத்தார்கள். ஆத்மீகவளர்ச்சி என்பது அறிவுநிலையில் உன்னதமானபடி. அதை வாச்யமாகவிவரிக்கஇயலாது. அனுபவத்தில்தான் காணமுடியும். சரீரவளர்ச்சிக்கும் சிகித்ஸைக்கும் வைத்யர்களின் கட்டளையைக்கேட்டு அதன்படி நடந்து, சரீரஸௌக்யத்தை அடைவதுபோல, ஆத்மீகவளர்ச்சிக்கு அத்மீகாநுபவர்வாய்ந்த மஹர்ஷிகளின்வாக்யங்களைக்கேட்டு, அதன்படி நடந்து ஆனந்தத்தை அடைவதுதான் வழி, வேறு வழியில்லை. சரீரஸுகத்தைக்காட்டிலும், ஆத்மாநுபவமுயர்ந்த ஸுகத்தைக்கொடுக்கும் என்பதும் அறிந்தவர்களுக்குத்தான் புலனாகும். ஆத்மா, பரமாத்மா, சேஷன், சேஷி, என்ற ஜ்ஞானம் நன்கு நமது மனத்திலேற்பட்டால் நம்மைக்காட்டிலும்ஸுக புருஷர் இருக்கமுடியாது. சரீரஸுகமென்பதை சரீரபோஷணத்தினால்அடைவதுபோல், ஆத்மஸுகத்தை ஆத்மபோஷணத்தினாலடையமுடியும். ஆத்மபோஷணமாவது யாது? ஆத்மா என்பது என்ன? அதைக் காப்பாற்றுவது எப்படி? காப்பது என்பது என்ன? அதைக்காப்பது யார்? அக்காப்பாளரின் குணதிசயங்கள் யாவை? என்ற பற்பல கேள்விகளுடைய பதிலை நாம் நன்கறிவதற்கு இன்றியமையாததுதான் வேதாத்யயனம். ஆகவே நமக்கு அழிவில்லாத பேரானந்தத்துக்குக்காரணமான ஆறங்கங்களோடுகூடிய வேதத்தினத்யயனம் அவச்யம் நம்மால் செய்யவேண்டியதாகிறது. ஒரு சிலர் இவ்வுலகில் முழுமையும் உழலுபவராகவே வேதாத்யயனத்தினால் நாம் அடையும் லௌகிகஸுகம்என்ன? அதாவது த்ரவ்யலாபம் என்ன? என்றெல்லாம் கேழ்ப்பதைக் கண்டு நாம் வருந்தவேண்டியிருக்கிறது. உலகில் அவரோ, அவரைப்போன்றவர்களோ ஒப்புக்கொண்ட பலவிஷயங்களைக் கற்றுக்கொண்டவர்களில் பலர் என்ன த்ரவ்யரூபமான பலனைக் கண்டிருக்கிறார்கள் என்றால் என்னகூறுவார். 'सन्तोष एव पुरुषस्य परं निधानम्' என்றபடி மனிதனுக்கு ஸந்தோஷந்தானே இவ்வுலகில் முக்யமானது. அது த்ரவ்யத்தினால் கிடைக்குமா? மனோநிலையினால் கிடைக்குமா? யோசித்துப் பார்த்தால் மனோநிலைதான் காரணம் என்பதை யாவரும் ஒப்புக் கொள்வார்கள். 'என் மனமே எனக்கு ஓர் ராஜ்யம்' என்று கூறிய ஓர் ஆங்கிலக்கவி இவ்விஷயத்தைத்தான்

மனதிற்கொண்டிருந்தார் என்பது தெளிவாகவில்லையா? ஆதலால் நிலையானதும், குறைவில்லாததுமான ஸந்தோஷத்துக்குக் காரணமான ஆத்மஜ்ஞானம் நமக்கு அவச்யமல்லவா?

உபயவேதாந்திகள் எனக் கூறப்படும் ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹத்தினருக்கு ஸம்ஸ்க்ருத வேதம்போல், த்ராவிடவேதமும் அவச்யமானதே. 'வேதம் தமிழ்செய்த மாரன்' என்பது ஸ்ரீ ஆழ்வார் திருநாமமல்லவா. வேதத்தின் கருத்துக்களை ஆழ்வார்கள் ஆய்ந்தெடுத்து பாசுரங்கள்மூலமாக நமக்கு அநுக்ரஹித்தருளியிருக்கிறார்கள். திவ்யப்ரபந்தம் எனப்படும் ஆழ்வார்களின் ஸ்ரீஸூக்திகளும் வேதபுருஷனை ப்ரதிபாதிப்பதாலன்றோ 'திவ்யப்ரபந்தங்களா'கின்றன. இப்படி நாலாயிர திவ்ய ப்ரபந்தங்களையும் நாம் அத்யயனம் செய்ய வேண்டும் என்பது நமக்கு விதிக்கப்பட்டதாகிறது.

இவ்வுலகில் நன்னெறியை நமக்கு எடுத்துறைப்பதற்கு இவைகளைக்காட்டிலும் உயர்ந்த ஸாதனம் வேறு ஏதாவது இருக்க முடியுமா? இப்படிப்பட்ட உயர்ந்த ஸாதனத்தை நாம் புறக்கணிப்பது நமது அறிவின்மையைக் காட்டுமல்லவா? ஒவ்வொரு ஸ்ரீவைஷ்ணவனும் இவ்விரண்டு வேதங்களையும் (முழுவதையும்) அத்யயநம் செய்தல் வேண்டும் என்று ஒருபுறமிருந்தாலும் லௌகிக வ்ருத்தியிலீடுபட்டவர்களும் ஒவ்வொரு நாளும் ஒரு சிறிதளவு அவகாசத்தையாவது இவ்விஷயங்களைக் கற்பதில் உபயோகப்படுத்துவது மிகவும் அவச்யம். 'எறும்பூரக் கற்குழியும்' என்றபடி தினமும் சிறிதளவேனும் இம்மாதிரியான பாகங்களைக் கற்றுவந்தால் நாளடைவில் தங்களையறியாமலேயே ஒவ்வொருவரும் எல்லாபாகங்களையும் கற்றறிந்தவர்களாக ஆகிவிடமுடியுமென்பது அநுபவித்தவர்களின் ஆழ்ந்த கருத்தே.

முன்னாட்களில்வேதாத்யயனம்செய்வதே தங்களுடைய புருஷார்த்தமெனக் கருதியவர்கள் உபய வேதங்களையும் செவ்வனே அத்யயனம் செய்தார்கள். நாளடைவில் நம்பிக்கை சற்று தளரவே மனோஸங்கல்பமும் குறைந்தது. ஆதலால் ஒருவேதத்தைமட்டும் அத்யயனம்செய்ய ஆரம்பித்தார்கள். பிறகு பொருளாதாரநிலைமையின் காரணமாக படிப்பிற்கும் பொருள் வருவாய்க்கும் ஸமஎடைபோட வாரம்பித்தார்கள். அப்பொழுதுதான் இக்கல்விக்குக் கேடு வரவாரம்பித்தது. இவ்வுயர்ந்தகல்வியைக் கற்றவர்களுக்கு இதன்மூலமாகப் பொருளாதார அபிவ்ருத்தி ஏற்படாததால் இவர்களை உலகம் ஸரியாகநடத்தவில்லை எனக் கூறலாம். ஏதோ ஒருசிலரே இக்கல்விக்கு உறியர்போலும், மற்றவர்களுக்கு இது வேண்டுவதில்லை'போலும் எண்ணவாரம்பித்தார்கள். முடிவில் இம்மாதிரியானகல்வியே அடியோடு மறையவாரம்பித்தது. ப்ராசீனகாலங்களில் இம்மாதிரியான அத்யயனங்களுக்கென்றே ஏற்பட்டிருந்த தர்மஸ்தாபனங்களும் பலவித ஆதரவு இன்றியே மறைய ஆரம்பித்தது. இந்தவிதமான அத்யயனத்தின் பெருமையைப்பற்றி உபந்யஸிப்பதால்மட்டும் இதன் பெருமையை நிலைநாட்டிவிட முடியாது. இதற்கென்றே சிலர் தகுதி உள்ளவர்கள் என்ற எண்ணத்தையும் விட்டு ஒவ்வொரு ப்ராஹ்மணனும் ஒவ்வொரு தினமும் சிலநிமிஷநேரங்களேனும் இந்தக் கல்விகற்பதிலீடுபடுதல் மிகவும் அவச்யம். அனாதிகாலமாக வந்த இவ் வுயர்ந்த வேதாத்யயனத்தைத் தங்களுடைய ச்ரத்தைக்குறைவினால் ப்ராஹ்மணர்கள் இழந்துவிடுவார்களேயானால் அதைக்காட்டிலும் கேடானநிலை அவர்களுக்கு வேறொன்றும் இருக்கமுடியாது. இழந்துகொண்டேயிருப்பதால், தத்காலம் அதைக் காப்பாற்றிக்கொள்ளவும் முடியும். அப்படியின்றி முழுமையும் இழந்துவிட்டால் அந்த தனத்தை மீண்டும் அடைவது மிகவும் கடினம். இனியாவது வைதிகர்கள். லௌகிகர்கள் என்ற செயற்கைபேதத்தை உடனே மறந்து ஒவ்வொரு ஸ்ரீவைஷ்ணவனும் தனக்கு ஏற்பட்ட குலதனமாகிய உபயவேதாந்த அத்யயனத்தைச் செய்தும், இதிற்கூறப்பட்டுள்ளபடி நித்ய, நைமித்திக கர்ம, தர்மாநுஷ்டாநங்களைச் செய்தும்வந்தால் ஓரளவு அதனைக் காப்பாற்றிக் கொள்வான். இனியும் தாமதமும், அச்ரத்தையும் வேண்டாம்.

*   *   *   *   *   *   *

ஸ்ரீமதழகியசிங்கரின் திவ்யாநுக்ரஹத்தினால் பலவிடங்களில் பாடசாலைகள் ஏற்பாடாகி

பெண்கல்வி

வரும் ஸமயங்களில் இம்மாதிரியான பாடசாலைகளில் பிள்ளைகளை மட்டில் சேர்ப்பதென்ற நியமத்தில் ஓர் மாறுதல் செய்து பெண்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று சிலர் தங்கள் கருத்துக்களை எடுத்துக் கூறுகின்றனர். நமது ஸமூஹ முன்னேற்றத்திற்குப் பெண்கள் முக்யமான காரணமானதால், அவர்களுடைய யோகக்ஷேமாதிகளில் நாம் அக்கரைகாட்டவேண்டியது அவச்யமே. இக்கருத்துக்களை நமக்கு வெளியிட்டு வரும் ஸ்வாமிகளுக்கும் நமது க்ருதஜ்ஞதையைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

பெண்களுக்குக் கல்வி மிகவும் அவச்யமே. புராதனகாலங்களில் மைத்ரேயீபோன்ற ஸ்த்ரீ ரத்நங்கள் விசேஷமான யோக்யதையோடு இருந்தார்கள் என்பதும் உண்மை.

'पुराकल्पेषु नारीणां मौञ्जीबन्धनमिष्यते।
अध्यापनं च वेदानां सावित्रीवचनं तथा ॥'

என்ற வாக்யப்படி ஸ்த்ரீகள் வேதாத்யயனம் கூட செய்தார்களெனத் தெரிகிறது. ஆனால் சில நியமங்களினால் பூர்வகல்பங்களில் இருந்ததாகக் கூறப்படும் நிலைமை இக்கல்பங்களில் மாறுபட்டிருக்கின்றனவல்லவா? 'स्त्री शूद्र द्विजबन्धूनां त्रयी न श्रुतिगोचरा। इति भारतमाख्यानं कृपया मुनिना कृतम् ॥' இவ்வாக்யப்படி ஸத்ரீகள், சூத்ரர்கள், பதிதர்கள் அத்யயனார்ஹர்களில்லாததால் 'भारतं पञ्चमो वेदः' என்கிறபடி அவர்களின் க்ஷேமத்திற்காகவே வ்யாஸபகவானால் மிகுந்த கருணையுடன் மஹாபாரதம் எழுதப்பட்டது என்றும் அறிகிறோம். எப்படியிருப்பினும் அத்யாத்மவிசாரங்களில் ஸ்த்ரீகள் ஆழ்ந்த அறிவையும், ஆற்றலையும் பெற்றிருந்தார்கள். இப்படியாகவே ஸ்த்ரீகளின் கல்விநிலையைப்பற்றி நாம் எழுதிக்கொண்டே போகலாம். ஆனால் எம்மாதிரியான கல்வி பெண்களுக்கு வேண்டும்? அதைப் புகட்டும் குரு எப்படியிருக்கவேண்டும்? என்ற பலவித ப்ரச்னைகளில் அபிப்ராயபேதங்கள் ஏற்படுகின்றன. அபிப்ராயபேதங்களைத் தத்காலநிலையில் ஒதுக்கித் தள்ளவும் இயலாது. ஸமீபத்தில் ஒரு நண்பர் மைலாப்பூரிலிருந்து நமக்கு எழுதியிருக்கும் கடிதத்தில் நவீனகாலரீதியில் காணப்படும் பெண்கல்வியே நமது ஸமூஹத்தின் தாழ்மைக்குக் காரணமெனக் காணப்படுகிறது. இவைகளைப்பற்றி நாம் விவாதிக்க விரும்பவில்லை. ஆனால் ஒன்றுமாத்திரம் தைர்யமாகக் கூற விரும்புகிறோம்.

பெண்களுக்கு கல்வி அவச்யந்தான். குடும்ப ரக்ஷணத்திற்கு ஏற்ப எழுத, படிக்க, கணிதப்பயிற்சி இவைகள் தெரியவேண்டியதே. இக்கால நிலவரங்களினால் இதை நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். இவைகளைப் பெண்கள் தங்கள் பெற்றோர்களிடமே கற்றுக்கொள்ள முடியுமென்பதில் ஸந்தேஹமில்லை. மற்றும் புராதன க்ரந்தங்கள், ஆசார அனுஷ்டானங்கள், இவைகளைப் பெண்கள் படித்தறிந்தும், பார்த்தும், அநுஷ்டித்தும் நல்வழிக்கு வரவேண்டும். பொருளாதாரநிலைக்கேற்ப புருஷர்கள் லௌகிகவ்யாபாரங்களில் ஈடுபட்டிருந்தும் ஸமீபகாலத்தில் சிலவர்ஷங்கள்வரையில் ஒவ்வொரு க்ருஹத்திலும் பதிவ்ரதாசிரோமணிகளாக விளங்கிய ஸ்த்ரீகளாலேயே வைதிக, ஸதாசாரங்கள் காப்பாற்றப்பட்டு வந்தன. ஆனால் ஸமீபகாலத்தில் பிள்ளைகளோடு சேர்ந்தும் தனியாகவும் நவீனகால முறைப்படி கல்விபயின்று வந்த ஸ்த்ரீகள் க்ருஹங்களில் தோன்றலாரம்பித்ததும் ஸதாசாரங்கள் மிகவும்வருந்தத்தக்க ரீதியில் மாறிவிட்டிருக்கின்றன. இது கல்வியின் பயனாயின் இம்மாதிரிகல்வி நம் ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹத்திற்கு எவ்வளவு அவச்யம் என்பதை நாம் நன்கு யோசித்துப் பார்க்கவேண்டும்.

* * * * * * * * *

ஸ்ரீமதழகியசிங்கரின் ஸஞ்சாரம்

சோளதேசத்திலுள்ள திவ்யதேசங்களை மங்களாசாஸநம் செய்துகொண்டு எழுந்தருளியிருந்த ஸ்ரீமதழகியசிங்கர் சென்ற 13-4-54ல் திருவநந்தபுரம் மஹாராஜாவின் விருப்பத்திற்கிணங்க அநந்தசயநத்திற்கு எழுந்தருளினார். பல்லாண்டுகளாக ஸ்ரீமதழகியசிங்கர்கள்

எழுந்தருளாத காரணத்தினால் வர்ஷாகால மேகத்தைக்கண்ட சாதகபக்ஷிகளைப்போல் அந்தந்த விடங்களிலுள்ள பக்தஜநங்கள் ஸ்ரீ ந்ருஸிம்ஹன், கண்ணன், ஸ்ரீமதழகியசிங்கர் இவர்களை ஸாக்ஷாத்தாக ஸேவித்து பரவசமடைந்தனர். பத்மநாபதாஸன் எனக் குலப்பெயர் கொண்ட திருவாங்கூர் மஹாராஜாவும் ஸ்ரீந்ருஸிம்ஹதாஸனாக விளங்கியதும் இயற்கையே. பக்தர்களுக்குள் முதல்வனாக விளங்கிவரும் இம்மஹாராஜா வெகு பக்தி ச்ரத்தையுடன் ஸ்ரீமதழகியசிங்கரை வரவேற்றது கலியின்கோலாஹலம் அந்தநாட்டில் அதிகமாய்க்கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டிருக்கிறதென்பதைத் தெளிவாக்குகிறது. 'यथा राजा तथा प्रजाः' என்றபடி மஹாராஜாவின் ஆத்மகுணங்களைப் பின்பற்றும் ஜனங்களின் பக்திப்பெருக்கு ஒவ்வொரு இடத்திலும் வ்யக்தமாகக் காணப்பட்டதென்பது மிகவும் ஸந்தோஷகரமான செய்தியே.

திருவாங்கூரில் மஹாராஜா ஸாக்ஷாத்தாக வந்திருந்து ஸ்ரீமதழகியசிங்கரை தெண்டன் ஸமர்ப்பித்து, அவ் வாசார்யோத்தமரின் அநுக்ரஹத்தையும் பெற்றுக்கொண்டதை விபரமாய் மற்றொருபக்கத்தில் காண்கிறோம்.

திருவாங்கூரிலிருந்து ஸஞ்சாரமாகப் புறப்பட்ட ஸ்ரீமதழகியசிங்கர் திருவெட்டாறு, திருவெண்பதிசாரம் முதலிய திவ்யதேசங்களை மங்களாஶாஸனம் செய்துகொண்டு முன்பே ஸங்கல்ப்பித்தபடி ஆழ்வார்திருநகரிக்கு எழுந்தருளியாயிற்று.

* * * * *

ஸ்ரீ அஹோபிலமடம் பாடசாலையின் வார்ஷிகோத்ஸவம்

சென்ற வர்ஷம் சென்னை— மாம்பலத்தில் ஸ்ரீமதழகியசிங்கரின் திவ்ய நியமனத்தின் பேரில் உபக்ரமிக்கப்பட்ட ஸ்ரீமதஹோபில மடம் பாடசாலையின் கார்யங்கள் க்ரமமாக நடைபெற்று ஓர் வருஷமும் பூர்த்தியாயிற்று. வார்ஷிகப் பரீக்ஷைகள் முடிந்தவுடன் இப்பாடசாலையின் வார்ஷிகோத்ஸவம் 1–5–54 மாலை 6மணிக்கு ஸ்ரீ. உப. K பாஷ்யம் ஐயங்கார் B. A., B. L., M. L. C. அவர்களின் தலைமையில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அதுஸமயம் ஸ்ரீமதழகியசிங்கரின் புதுகல்விதிட்டம் அங்கு கூடியிருந்த பெரிய ஸமூஹத்தினருக்கு விபரமாய் எடுத்துறைக்கப்பட்டபின், பரீக்ஷையில் தேற்சிபெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. பல பெரிய வித்வான்கள் ஸம்ஸ்க்ருதக்கல்வியின் முக்யத்தைப்பற்றியும், ஸ்ரீமதழகியசிங்கரின் உயர்ந்த நோக்கங்களைப்பற்றியும் வெகு அழகாகப் பேசினார்கள். அத்யக்ஷஸ்வாமியும் இம்மாதிரியான பாடசாலைகளைப் பலவிடங்களில் உபக்ரமித்து, திட்டமிட்டபடியே நடத்திவந்தால் நம்ஸமூஹச் சிறுவர்கள் நல்லஸ்திதியை அடைவார்களென்றும், அது ஒருமஹோபகாரமான கார்யமென்றும் விளக்கினார். மற்றும் இம்மாதிரி பலவிடங்களில் பாடசாலைகள் நடந்துவந்தால் நாளடைவில் இப்பாடசாலையில் தேற்சிபெற்றவர்களின் யோக்யதையை அரசாங்கம், ஸர்வகலாசாலைமுதலிய ஸ்தாபநங்களும் அங்கீகரித்து அபிநந்திக்கும்படியாகும் என்றும் கூறினார். நிற்க தன்னைப்போன்றவர்கள் அரசாங்கத்தோடு விவாதித்து அம்மாதிரி ஸௌகர்யங்களைச் செய்யவும் முடியுமென்றும் கூறினார்.

இம்மாதிரியான லௌகிக, வைதிகப் பெரியோர்கள் நம் பாடசாலையின் கார்யக்ரமங்களைக் கண்டுகளித்து ஆதரளிக்கும் நிலையில் நாமிருப்பது ஸந்தோஷாவஹமே.

இம்மஹான்களுக்கும் நமுடைய க்ருதஜ்ஞதையைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். அன்றையதினம் மஹோத்ஸவத்திற்கு சென்னையிலுள்ள பல ஆஸ்திகர்களும், ஸ்ரீ ஸந்நிதியில் அபிமானமுள்ள பலஸ்வாமிகளும் எழுந்தருளியிருந்து நிகழ்ச்சிகளைச் செவ்வனே நடத்திக்கொடுத்ததற்கும் நம்முடைய நன்றியை அறிவித்துக்கொள்ளுகிறோம்.

* * * * * * *

புது வர்ஷமும் புது பாடசாலைகளும்

சென்ற ஸம்வத்ஸரம் மதுராந்தகம், மாம்பலம், பாதூர் என்ற மூன்றுவிடங்களில் ஸ்ரீமதழகியசிங்கரின் திவ்ய நியமனப்படி பாடசாலைகள் ஆரம்

பிக்கப்பட்டு நன்றாக நடந்து வருகின்றன. இதேபோல பற்பலவிடங்களில் பாடசாலைகளை ஆரம்பித்து, அதன்மூலமாக நமது ஸமூஹத்திலுள்ள சிறுவர்களை வைதிக முறையில் அநுக்ரஹித்தருளவேணும் என்பது ஸ்ரீமதழகியசிங்கரின் திருவுள்ளம். அதற்குகப்பப் பெற்றோர்கள் ஒவ்வொரு க்ராமத்திலும், நகரத்திலும் முயற்சியெடுத்துக்கொண்டு வேண்டிய பிள்ளைகளைச் சேகரம் செய்துகொண்டு அடியோங்களுக்குத் தெரிவித்தால் ஆங்காங்கு புதியபாடசாலைகளையுபக்ரமிக்க ஸௌகர்யமாகவிருக்கும். பாடசாலை நடத்த வேண்டியஸௌகர்யங்களை ஸ்ரீமதழகியசிங்கர் அநுக்ரஹித்தருளத்திருவுள்ளம்பற்றியானபோதிலும், ஆங்காங்குள்ள பெற்றோர்கள், பெரியோர்கள் இவர்களின் உத்ஸாஹமும், ஒத்துழைப்பும் இல்லாமல் இக்கார்யங்களை ஆரம்பிக்கவோ, நன்கு நடத்தவோ இயலாது. திருக்குடந்தை, ஸ்ரீரங்கம், காஞ்சீபுரம், வடுவூர், தஞ்சாவூர், பாலக்காடு, (வைகை, தாம்ரபர்ணீ நதிக்கரையிலுள்ள அக்ரஹாரங்கள்! முதலியவிடங்களில் இம்மாதிரியான பாடசாலைகளை உபக்ரமிக்க ஆசைப்படுகிறோம். ஆங்காங்குள்ள லௌகிக வைதிக ப்ரமுகர்கள் உத்ஸாஹத்துடன் பெற்றோர்களைக்கொண்டு பாடசாலைக்கு வேண்டிய பிள்ளைகள் கிடைக்கும்படி ஏற்பாடுசெய்து தெரிவிக்கவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். உடனே பாடசாலை உபக்ரமிப்பதற்கு வேண்டியஏற்பாடுகளைச்செய்யஸித்தமாகஇருக்கிறோம். நாங்களாகவே ஆங்காங்கு சென்றுஏற்பாடுசெய்வதென்பதும் அங்குள்ளபெரியோர்களின் உதவியில்லாமல் முடியாதல்லவா.

சென்றவருஷ முபக்ரமிக்கப்பட்ட மதுராந்தகம், மாம்பலம், பாதூர் முதலியவிடங்களிலுள்ள பாடசாலைகள் ஜூன்மாதம் ஆரம்பத்தில் கோடைவிராமம் முடிந்து மறுபடியும் ஆரம்பமாகும். புதியவித்யார்த்திகளைச் சேர்ப்பதற்கும் வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. மாம்பலத்தில் ஸ்ரீமதழகியசிங்கரின் திவ்யாநுக்ரஹத்தினால் பாடசாலைக்கென்றே ஓர் தகுதியான இடம் வாங்கப்படுகிறது. அவ்விடத்தில் பாடசாலைக்குவேண்டிய கட்டிடவஸதிகளையும் விராமகாலத்திலேயே முடிக்கவும் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

சென்றவர்ஷம்போல் இவ்வர்ஷமும் தகுதியுள்ள பிள்ளைகளுக்கு ஸ்ரீ ஸந்நிதியிலேயே உபநயநம் செய்துவைக்கவும் ஏற்பாடாகி வருகிறது. வைதிகப் பற்றுள்ளவர்களாகவும், நல்ல கல்விப்பயிற்சி யுடையவர்களாகவும், பிற்காலத்தில் வாழ்கைக்கு (இஹ, பர ஸாதநங்களோடுகூடவும்] உபயோகமுள்ள நற்கார்யங்களில் பெற்றோர்கள் தகுந்த உத்ஸாஹத்தைக் காட்டி, தங்கள் பிள்ளைகள் நல்வழிக்கு வருவதற்கென்றே செய்யப்படும் ஏற்பாடுகளின் பூர்ண பலனை அடைவார்கள் என்றே நாம் திடமாக நம்புகிறோம்.

* * * * * * *

ஸ்ரீபாஷ்யகாரர் திருநக்ஷத்ர மஹோத்ஸவம்

சித்திரை ஆதிரையில் வந்து ஜகத்துதித்த ஸ்ரீபகவத்ராமாநுஜனின் திருநக்ஷத்ரமஹோத்ஸவத்தை நாம் இம் மாதம் எல்லாவிடங்களிலும் கொண்டாடுகிறோம்.

அநாதிகாலமாய் வேதப்ரதிஷ்டாபிதமான நம் ஸித்தாந்தம் வ்யாஸமஹர்ஷியினால் ஸூத்ரரூபமாய் எழுதப்பட்டு, போதாயனரால் வ்ருத்திரூபமாக்கப்பட்டு, டங்கர், த்ரமிடர், குஹதேவர் முதலிய ப்ராசீனர்களால் விஸ்தரிக்கப்பட்ட ஸித்தாந்தத்திற்கு வெகு அழகாக 'ஸ்ரீபாஷ்யம்' என்று போற்றப்பட்ட பாஷ்யத்தை நமக்கு அருளியும், நமது தினசர்யையை சீர்செய்தும், அர்சாவதார மஹிமையை நமக்கு நன்குணர்த்த பூலோகஸ்ரீவைகுண்டமெனப்படும் ஸ்ரீரங்கக்ஷேத்ரத்தில் உள்ள ஆலய வழிபாடுகளை வைகுண்டத்திற்கு ஒப்ப ஏற்பாடு செய்தும், தன்னுடைய ஸித்தாந்தங்கள் நமக்கு நன்கு தெளிவாவதின்பொருட்டு க்ரந்தரூபங்களில் நமக்கு உபகரித்தும், உள்ள பெரிய ஜகதாசார்யஶ்ரேஷ்டரின் ஜன்மோத்ஸவத்தை நாம் வெகு விமர்சையாகக் கொண்டாடவேண்டியது நமது கடமையே. பல கோயில்களில் ஸ்ரீபாஷ்யகாரோத்ஸவங்களும், அக்காலங்களில் நம் ஸித்தாந்த ப்ரதிஷ்டாபநரூபமான உபந்யாஸ, காலக்ஷேபாதிகளும் நடந்துவருகின்றன. மேன்மேலும் இம்மஹானின் பெருமையை அதிகமாய் எடுத்துரைத்து நமது ஆத்மலாபத்தை அதிகரித்துக்கொள்வதுடன், உலகக்ஷேமத்தை வ்ருத்தி செய்வதிலும்நாம் ஈடுபடவேண்டும்.

தில்லையம்பூர் ஸ்வாமியின் மறைவு

ஸ்ரீ பகவத்ராமாநுஜ ஸித்தாந்த ஸ்தாபநத்திற்காக ஏற்பட்ட ஸ்ரீ அஹோபிலமடத்தின்கண் தோன்றிய வித்வான்கள் ஆயிரக்கணக்கானவர்கள். ஒவ்வொரு காலத்தில் பல வித்வான்கள் தோன்றி ஸித்தாந்தங்களையும், ஸம்ப்ரதாயங்களையும் வ்ருத்திசெய்துவந்தும் மறைந்துமிருக்கிறார்கள். தில்லையம்பூர்ஸ்வாமிகள் நம் ஸித்தாந்தஸ்தாபநத்திற்காகவே தோன்றியவர்கள் என்று கருதப்பட்ட காலங்களில் வாழ்ந்தவர்கள் பண்டிதர்களே. அந்தஸ்வாமிகளில்ஒருவர் முன்பே மறைந்தார். மற்றொருஸ்வாமியான முடும்பை, சக்ரவர்த்தி, வித்வான், வெங்கடாசார்யஸ்வாமி சென்ற பங்குனி மீ 11 உ மறைந்ததை நாம் மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம். வயப்ரயுக்தராய் ஸ்ரீக்ராமத்திலேயே எழுந்தருளியிருந்தாலும் நம் ஸித்தாந்தத்தின் பெருமை வெளிப்படுவதற்குக் காரணமாயிருந்தஸ்வாமி ஸ்ரீபகவத்பாதாரவிந்தத்திற்குநிரதிசயாநந்தாநுபவத்திற்காகஎழுந்தருளினார் என்பது அந்தஸ்வாமியின் பாக்யவசமேயாயினும், இவ்வுலகின்கண் உள்ள நமக்கேற்பட்ட குறையே. இருந்தாலும் நாம் செய்வது என்ன. **भवितव्यता बलवती अनिवार्या.**

ஸ்ரீ:

விசிஷ்டாத்வைதவேதாந்தகோசம்

ஸ்ரீ அஹோபிலமடத்தில் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராயெழுந்தருளியிருந்த
ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்கசடகோப யதீந்த்ர மஹாதேசிகனின்
திவ்ய நியமநத்தின்பேரில் ப்ரசுரிக்கப்பட்டது.

ஸம்பாதகர்:— ஸ்ரீ. உப. வித்வான், திருவரங்கம் திருமலை தாதாசாரியர். M. O. L.
(D. T. தாதாசாரியர்)

விலை ரூபாய் **20—0—0.**

கிடைக்குமிடம்
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஆபீஸ் திருவுள்ளூர்.

இப்புஸ்தகம் விசிஷ்டாத்வைதிகளுக்கு மிகவும் முக்யமானது. இதில் 107 புஸ்தகங்களிலிருந்து எடுக்கப்பட்ட அனேக பதங்களுக்கு விசிஷ்டாத்வைத ரீதியில் அப்புத்தகங்களிலுள்ள வ்யாக்யாநப்படி அர்த்தம் செய்யப்பட்டிருக்கிறது. சுருங்கச்சொல்லின் இப்புஸ்தகம் விசிஷ்டாத்வைதிகளுக்கு ஒரு நிகண்டு (அகராதி)வாகத் திகழ்கிறது என்னலாம். 374 பக்கங்கள் உள்ளன. 500 காபிகளே கைவசமிருப்பதால் இப்புஸ்தகத்தை விரும்புவோர்கள் முந்திக்கொள்ளவேணும். புஸ்தகம் நல்ல பயிண்டுடன் கூடியிருக்கிறது.

ஸ்ரீ:

திருப்பாவைக் கதை

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

'तमसः परमो धाता शङ्खचक्रगदाधरः' என்றும், **'भवान् नारायणो देवः श्रीमांश्चक्रायुधो विभुः'** என்றும், **'पुष्कराक्ष महाबाहो महाबल परन्तप'** என்றும் கூறப்படுகிறது. ஸ்ரீமத்பாகவதத்தில் பகாஸுர ஸம்ஹாரமான உடனே கோபாலச் சிறுவர்கள் ஆச்சர்யப்பட்டு அந்த வ்ருத்தாந்தத்தை நந்தரிடம் அறிவிக்க அவர், ஸ்ரீ க்ருஷ்ணன் ஸாமாந்யக் குழந்தையன்று. ஸாக்ஷாத் ஸர்வேச்வரனே லோகாநுக்ரஹம் பண்ணுவதற்காக இந்த ரூபத்தில் வந்திருக்கிறானென்று கர்கர் தன்னிடம் சொல்லியிருப்பதாகவும் அது வாஸ்தவமே என்று இவ்வித அமாநுஷச் செயல்களால் ஸ்பஷ்டமாகிறதென்றும் சொன்னதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி பகாஸுரவதத்திற்குப் பிறகு நந்தர் முதலானவர்களால் அறிந்து அநுபவிக்கப்பட்ட பரத்வத்தை நினைத்து அதன் அடையாளங்களை 'சங்கொடு சக்கரம்' இத்யாதியால் இந்த நாயகப் பெண் கூறினாள்.

15. எல்லே

பிரிந்துபோன பெண்கள் உத்ஸாஹமாகப் பாடிக்கொண்டு வ்ரதம் ஆரம்பிக்கவேண்டிய இடத்திற்குப் போய் அங்கு தீர்த்தத்தினுடையவும் மரம் செடி கொடிகளுடையவும் அழகைப் பார்த்துக் களித்தும் மணலில் விளையாடியும் சிறிது காலம் போக்கினர். பிறகு அவர்களுடைய மனது அவர்கள் ஊரில் விட்டு வந்த தோழிகளை நினைத்தது. கொஞ்சம் நாழி ஆக ஆகப் பிரிவினால் ஏற்பட்ட ஒரு குறையும் அமைதியின்மையும் வருத்தமும் ஏக்கமும் தோன்றின. ஒருவருக்கொருவர் முகத்தைப் பார்த்தனர். 'நாயகப் பெண் சொன்னபடி நடந்திருக்கவேண்டும். அவஸரப்பட்டுத்தான் வந்து விட்டோம். அது தவறுதான்' என்று ஒவ்வொரு பெண்ணின் ஹ்ருதயத்திலும் இருந்த பச்சாத்தாபத்தை வெளிப்படுத்துவதுபோல் இருந்தது அந்தப் பார்வை. சிறிது நேரம் கழித்து

ஒருத்தி—என்னடி இன்னும் அவர்கள் வரவில்லையே?

மற்றொருத்தி—எல்லாரையும் எழுப்பி அழைத்துக் கொண்டுதானே வருவார்கள். அதற்குள் அவஸரப்பட்டால் முடியுமோ. நாம் தான் இங்கே எதோ முழுகிப் போகிறதுபோல் ஓடி வந்து விட்டோம்.

இன்னுமொருத்தி—வந்து விட்டால் என்ன ப்ரமாதம்? மறுபடியும் போய்ச் சேர்ந்து கொண்டால் போயிற்று.

மற்றொருபெண்—மறுபடியும் போய்ச்சேர்ந்து கொள்வதென்றால்வெட்கமாயிருக்காதா அம்மா? நீ என்னமோ சொல்லுகின்றாயே.

இன்னுமொரு பெண்—எல்லோரும் நம்மைப் பார்த்துச் சிரிப்பார்கள். பலர் பலவிதமாகப் பரிஹாஸம் செய்வார்கள்.

மற்றுமொரு பெண்— இதெல்லாமிருக்கட்டும். முதலிலிருந்து முக்யமான ஒரு விஷயத்தை அடியோடு நாம் மறந்து விட்டோமே. அதை எப்படி மறந்தோம் என்பதை நினைக்க நினைக்க எனக்கு வெகு ஆச்சரியமாக விருக்கின்றது.

எல்லோரும்—அதென்னடி அவ்வளவு ஆச்சர்யமான விஷயம்?

அப்பெண்— தூங்குகின்றவர்களையெல்லாம் எழுப்பி அழைத்துக்கொண்டு அவர்கள் எங்கே போகப் போகின்றார்கள்? அதை நினைத்தீர்களா? நேராக இங்கேயா வரப்போகின்றார்கள்? இல்லவேயில்லை. ஸ்ரீ க்ருஷ்ணன் திருமாளிகைக்குச்சென்று திருப்பள்ளியெழுச்சிப் பாடி அவனைப் பலவிதமாக ஸேவித்து அவனையும் அழைத்துக்கொண்டு வெகு ஆநந்தமாகவன்றோ வரப்போகின்றார்கள். அந்த ஸேவையையெல்லாம் சிறிதும் நினைக்காதே நம்முடைய ஸம்ப்ரமத்தில் நேராக நதிக்கரைக்கன்றோ ஓடி வந்துவிட்டோம். எவ்வளவு பெருந் தவறு செய்திருக்கின்றோம். நினைத்துப் பாருங்கள்.

இப்படி ஸ்ரீக்ருஷ்ணன் ஸேவையை நாம் மறந்தது வெகு ஆச்சர்யமான விஷயமன்றோ?

இதைக் கேட்ட எல்லோரும் மிகவும் வருந்தி ஒருவர்க்கொருவர் முகத்தைப் பார்த்தனர். பிறகு 'தோழிகள் என்ன பரிஹாஸம் செய்தாலும் ஸரி. போயே தீரவேண்டும். ஸ்ரீ க்ருஷ்ணனுடைய திருப்பள்ளியெழுச்சி ஸேவையை எக்காரணத்தாலும் நாம் இழக்கக்கூடாது. அவர்கள் ஸ்ரீ க்ருஷ்ணன் திருமாளிகைக்குப் போய்ச் சேர்வதற்கு முன்பே ஓட்டமாக ஓடி அவர்களுடன் நாம் கலந்து கொள்ள வேண்டும்' என்று ஏகமனதாய்த் தீர்மானித்துத் துரிதமாக நடந்து வந்தார்கள். நாயகப் பெண்ணும் மற்றவர்களும் நிச்சலாவை எழுப்பி அழைத்துக் கொண்டு வீதியில் வந்துகொண்டிருக்கும் ஸமயம் அது. இவர்களைச் சற்று தூரத்திலேயே பார்த்த அப்பெண்கள் இன்னும் இவர்கள் ஸ்ரீ க்ருஷ்ணன் அரண்மனைக்குப் போகவில்லை யென்பதை அறிந்து மனக் கவலை நீங்கி 'அம்மாடி, ஸமயம் தப்பாமல் வந்து சேர்ந்து விட்டோம்' என்று ஸந்தோஷப்பட்டார்கள். நாயகப்பெண்ணின் கோஷ்டியிலுள்ளோர் பிரிந்து போனவர்கள் திரும்பி வருவதைப் பார்த்துக் கல கல வென்று ஒரே சிரிப்பாகச் சிரித்துக்கைகளைத் தட்டிப் பெரும் ஆரவாரம் செய்தனர். நாயகப் பெண்ணோவெனில் 'நம்முடன் சேர நல்ல வேளையாய் திரும்பி வந்துகொண்டிருக்கின்றனர். அவஸரப்பட்டுப் பிரிந்து போனதற்கு அவர்களே இப்போது மிகவும்வருத்தப்பட்டுக்கொண்டிருப்பர். ஆகையால் நாம் ஒன்றும் அவர்களைச் சொல்லக் கூடாது. அவர்கள் நெருங்கி வந்ததும் ஸந்தோஷத்துடன் வரவேற்று ஸஹஜமாய் அவர்களுடன் கலந்து போவோம்' என்று மிகவும் கம்பீரமான முறையில் தன் ஸகிகளைச் சாந்தப்படுத்தி விட்டுப் பிரிந்துபோன பெண்கள் அருகில் வந்தவுடன் 'வந்தீர்களா; வாருங்கள். ரொம்ப ஸந்தோஷம். நீங்கள் இராமலிருந்தது எனக்கு மிகக் குறைவாகத்தான் இருந்தது' என்று சொல்லி அவர்களை வரவேற்று எல்லோருடனும் மேல் சென்றாள். சிறிது தூரம் சென்ற பிறகு 'இனி நாம் நேராகக் க்ருஷ்ணன் அரண்மனைக்குப் போகவேண்டியது தானே. நமது ஸகிகள் யாவரும் வந்து விட்டார்களன்றோ. ஒருவரும் பாக்கியில்லையே' என்றாள். அப்போது ஒரு பெண் 'நேற்றே சொன்னேனே. இவள் சண்டிப்பேர்வழி. ஸமயத்தில் வரமாட்டாள். நாம் போய்க் கூப்பிட்டாலும் சண்டைக்கு வருவாள், என்று. அந்த ப்ரமந்தா தான் இன்னும் வரவில்லை. அவளை எழுப்பி அழைத்துப் போவது வெகு ச்ரமம்' என்றாள். 'ஓஹோ அப்படியா. ப்ரமந்தாவா வரவில்லை. சரி. அவள் வீட்டுக்குப் போவோம். வாருங்கள். அங்கு நீங்கள் அவளிடம் ஒன்றும் பேசவேண்டாம். வெறுமனே இருங்கள். நானே சொல்லவேண்டியதைச் சொல்லி எழுந்து வரும்படி செய்கின்றேன்' என்று நாயகப்பெண் எச்சரித்தாள். பிறகு யாவரும் மேல் நடந்து சென்று ப்ரமந்தாவின் க்ருஹத்தின் அருகே நின்றார்கள். கதவுகள் திறந்து பெரியோர்களெல்லாரும் அவரவர்கள் வேலையைச் செய்து கொண்டிருந்ததைப்பார்த்து அவர்களுடைய அநுமதியைப் பெற்று ப்ரமந்தாவின் பள்ளியறைக்குச் சென்றனர். அங்கு அவரவர்களுடைய ஸ்வபாவத்திற்குத் தக்கபடி நடப்பதில் அபார ஸாமர்த்தியமுள்ளவளான நாயகப் பெண் தனக்கு அவளிடத்திலுள்ள மிகுந்த அன்பையும் ஸ்நேஹத்தையும் மதிப்பையும் பெருக்கும் அழகான முறையில் பேசி அவளை எழுப்பினாள். அதற்கு ப்ரமந்தா அதட்டுவது போலும் அன்பு, நட்பு, தாக்ஷிண்யம், இவைகள் சிறிதுமில்லாதவர்கள் பேசுவது போலும் மறுமொழி கூறினாள்.

நாயகப்பெண் — 'எல்லே இளங்கிளியே.' முற்றின ஸ்நேஹமுள்ளவர்கள் அளவு கடந்த தமது அன்பு ததும்ப பரஸ்பரம் விளிக்கும் போது உபயோகப்படுத்தும் அருமையான விளிச் சொல் 'எல்லே' என்பது. 'இளம் பிராயத்திலுள்ள உன் அழகை இன்றைக் கெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கலாமே. நீ பேசினால் அதன் அழகை இன்றைக்கெல்லாம் கேட்டுக்கொண்டிருக்கலாமே. உன்னைப் பார்க்கா

மல் எங்களுடைய கண்களும் உனதுபேச்சைக் கேளாமல் எங்களுடைய காதுகளும் உற்ற பயன் பெறாமல் ஏங்கி நிற்கின்றனவே.' 'இன்னம் உறங்குதியோ.' 'இன்னமா தூங்குகின்றாய். விடியற்காலத்திற்கு என்னென்ன லக்ஷணமோ அதெல்லாம் ஒன்று விடாமல் ஏற்பட்டு விட்டதே. இனி எழுந்திராதவர் ஒருவருமிருக்கமாட்டார்களே. நமது வ்ரதத்திற்காக நாம் போவதில் இனி ஒரு நொடியும் விளம்பம் செய்வதற்கில்லையே. இன்னும் தூங்குவதா? இது தகாது. உடனே எழுந்து வா, அம்மா.'

ப்ரமந்தா—'சில்லென்றழையேன் மின் நங்கைமீர் போதர்கின்றேன்.' 'இவள் தூங்கவில்லை' விழித்துக்கொண்டேபடுத்துக்கொண்டிருக்கின்றாள். செய்யவேண்டிய காரியத்தைப் பற்றி உடம்பில் சிறிது பரபரப்பும் இல்லாதவள் இவள். அதனால் வெகு நாழியாக விழித்துக்கொண்டிருந்தும் 'அவர்கள் எல்லாரும்வரட்டுமே. பிறகு எழுந்திருப்போமே' என்று எண்ணி படுத்துக்கொண்டே இருந்தாள். எழாமல் படுத்திருந்தவர்களைச்சீக்கிரம் எழுப்புவதற்காக உரத்த குரலிலேயே கூப்பிட்டுக் கூப்பிட்டு வழக்கப்பட்ட நாயகப்பெண் இங்கும் அப்படிக் கூப்பிட்டது ப்ரமந்தாவுக்குப் பிடிக்கவில்லை. நிச்சப்தமாக இருந்த இடத்தில் திடீரென்று உரத்த குரல் உண்டானது அவளுக்கு அதிர்ச்சியைத் தந்தது. அதனால் உடனே 'கீச் கீச் சென்று' அடித்துக்கொள்ளாதீர்களடிபெண்களா, இதோ வருகின்றேன்' என்றாள் சிறிது கோபமாகவும் வேகமாகவும். 'நீங்கள் வந்துவிட்டீர்கள் என்று தெரிந்தால் நான் எழுந்து வந்து விடமாட்டேனா. வீடு அதிரும்படி இவ்வளவு சத்தம்போடுவானேன் என்பது அவள் கருத்து.

மறுமொழி தந்தபடியால் ப்ரமந்தா தூங்கவில்லை யென்பது தெரிந்தது. அப்படித் தூங்காமலிருந்து, வெளியில் நின்ற தோழிகள் அழைத்ததைக் கேட்டவள் உடனே எழுந்து வரவேண்டியது உசிதம். அப்படிச்செய்யாமல் உள்ளிருந்தபடியே 'சத்தம் போடாதீர்கள். வருகின்றேன்' என்று சொல்வது எதற்காக? அர்த்தமில்லாத வெறும் பேச்சு இது, என்று நாயகப் பெண் எண்ணினாள். அதனால் 'வல்லையுன் கட்டுரைகள்' என்று அடுத்த க்ஷணமே இவள் கூறினாள். 'அடி கெட்டிக்காரி, உன் பேச்சுக்கள் இருக்கின்றனவே அவை இருக்கட்டும்' என்பது இதன் பொருள். உன் பேச்சுக்கு அர்த்தமே இல்லை. அதை நாங்கள் நம்பமாட்டோம். செய்ய வேண்டியதைச் செய். பேச்சொன்றும் பேசாதே, என்பது கருத்து. 'என் பேச்சுக்கு அர்த்தமே இல்லை. நான் பொய்யே பேசுகின்றேன் என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்' என்று அவள் கேட்கக்கூடும். அதற்காகப் 'பண்டே யுன் வாயறிதும்' என்றும் சொன்னாள். 'முன் பல தடவைகளில் உன் பேச்சின் உண்மையை அறிந்திருக்கின்றோமே. இது முதல் தடவையா என்ன? ஆகையால் 'வருகின்றேன்'. என்று நீ சொல்வது பற்றாது. உடனே எழுந்து வா' என்று அறிவித்தாள்.

ப்ரமந்தா—'வல்லீர்கள் நீங்களே நானே தானாயிடுக' அதன் பிறகும் எழுந்து வராமலே நாயகப் பெண் சொன்ன சொல்லில் குற்றங் கொண்டு அக்குற்றம் அவர்களிடத்திலேயே உள்ளதாகப் பேசினாள். 'ஸமயத்திற்குத் தக்கபடி அவ்வப்போது ஏதாவது சொல்லிக் கொண்டிருக்கிறது. ஆனால் அதன்படி ஒன்றும் செய்வதில்லை' என்ற இக் கருத்தில் அன்றோ என்னை 'கெட்டிக்காரி' என்கிறீர்கள். இப்படிப்பட்ட கெட்டிக்காரிகள் நீங்கள்தான். நானில்லை. இனிமேல்தான் நானும் அவ்விதக் கெட்டிக்காரியாக ஆகவேண்டும்' என்றாள்.

நாயகப்பெண் – 'ஒல்லை நீ போதாய் உனக்கென்ன வேறுடையை.' மேல் மேல் பேச்சை வளர்த்தக் கூடாதென்று எண்ணிச்சொல்ல வேண்டியதை ஸ்பஷ்டமாகச் சொன்னாள் — 'சீக்கிரம் நீ எழுந்து வா' என்று. 'எழுந்து வராமலே பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்தால் 'இப்பொழுது ஆரம்பிக்கப்பட்டிருக்கும் வ்ரதத்தில் ஸம்பந்தப்பட உனக்கு இஷ்டமில்லை. வேறு ஏதோ ஒரு கார்யம் நீ வைத்துக் கொண்டிருக்கின்றாய்' என்று தோன்று

கிறது. அப்படி வேறு கார்யம் ஏதாவது உனக்கு இருக்கிறதா என்ன? இல்லாவிட்டால் உடனே எழுந்து வந்து எங்களுடன் கலக்க வேண்டியதுதானே' என்றும் சொன்னாள்.

ப்ரமந்தா – 'எல்லாரும் போந்தாரோ.' தனது உட்கருத்தை இப்போது வெளியிட்டாள். அதாவது–முன்னாடியே எழுந்து வந்து 'இவர்கள் வரவில்லை. அவர்கள் வரவில்லையென்று காத்திருப்பதில் அவளுக்கு மிகுந்த வெறுப்பு. 'எழுந்தோம். உடனே செய்யவேண்டிய காரியத்தைச் செய்தோம்' என்றிருக்க வேண்டுமென்பது அவள் நோக்கம். ஆகையால் 'ஒருவர் தப்பாமல் எல்லோரும் வந்து விட்டார்களா, சொல். உடனே எழுந்து வருகின்றேன்' என்று குறிப்பிட்டாள்.

நாயகப்பெண்–'போந்தார் போந்தெண்ணிக்கொள்.' தூங்கினவர்களெல்லாரும் எழுந்து வந்து விட்டபடியாலும் பிரிந்து போனவர்களும் வந்து சேர்ந்து விட்டபடியாலும் இனி வரவேண்டியவர்கள் ஒருவருமில்லை. ஆகையால் தயங்காமல் உடனே 'எல்லோரும் வந்து விட்டார்கள்' என்று அழுத்தமாகச் சொன்னாள். நீங்கள் சொல்வதை எப்படி நம்புவது? நான் எழுந்து வருவதற்காக அப்படிச் சொல்லி விட்டு நான் வந்த பிறகு, இவள் வரவேண்டும் அவள் வரவேண்டுமென்று சொன்னால் என்ன செய்வது' என்று அவள் ஸந்தேஹிக்கலாம். அதற்காக 'வந்து எண்ணிக்கொள்' என்று மேலும் சொன்னாள். 'உன் ஸந்தேஹம் கழிவதின் பொருட்டு இவர்களை எண்ணுவதற்காகவாவது எழுந்து வெளியில் வா முதலில். பிறகு மற்ற விஷயங்களைப் பற்றிப் பேசுவோம்' என்பது குறிப்பு.

இவ்வார்த்தையைக் கேட்ட பிறகு மேல் ஒன்றும் பேசாமல் எழுந்து கதவைத் திறந்து வெளியில் வந்து எல்லோரையும் பார்த்தாள் ப்ரமந்தா. இவ்வளவு வாதாடிய பிறகாவது இவள் எழுந்து வந்தாளே என்று எல்லாப் பெண்களும் ஸந்தோஷித்தார்கள். இதுவும் எம்பெருமானுடைய க்ருபையினால்தான் நடந்ததென்றும், இதற்காகவும் பகவந்நாம ஸங்கீர்த்தனம் இப்போது செய்யவேண்டுமென்றும் கருதிய நாயகப்பெண் 'எம்பெருமானைப் பாடுங்கள்' என்று தோழிகளை வேண்டினாள்'

இங்கு மேலும் சில க்ருஷ்ணாவதாரச் சிறப்புக்களையே சொல்லி எம்பெருமானைக் குறித்தாள்—'வல்லானை கொன்றானை மாற்றாரைமாற்றழிக்க வல்லானை' என்று. 'வல்லானை கொன்றானை' என்றது 'குவலயாபீடம் என்னும் வலிவுள்ள யானையைக் கொன்றவனை' என்றபடி. கம்ஸன் கட்டளைப்படி நந்தகோகுலத்திற்குப் போய் அக்ரூரரால் அழைத்து வரப்பட்ட பலராமனும் க்ருஷ்ணனும் மதுராபுரியில் கம்ஸனுடைய ஸபைக்குள் ப்ரவேசிக்கும்போது குவலயாபீடம் என்னும் ஒரு பெரும் யானை வழியை மறைத்துக் குறுக்கே நின்றது. அப்போது ஸ்ரீ க்ருஷ்ணன் யானைப்பாகனைப் பார்த்து 'வழியை விட்டு வேறிடத்தில் யானையை நிறுத்து. இல்லாவிட்டால் உனக்கும் உன்யானைக்கும் தீங்கு விளையும்' என்று எச்சரிக்கை செய்தார். க்ருஷ்ணனை ஹிம்ஸிப்பதற்காகவே அங்கு யானை நிறுத்தப்பட்டதாகையால் பாகன் யானையை வேறிடத்திற்கு ஓட்டாமல் க்ருஷ்ணனையே தாக்கும்படி ஏவினான். அது வேகமாகப் பாய்ந்து துதிக்கையினால் க்ருஷ்ணனைப்பிடித்தது. அவர் வெகு எளிதாக அதன் பிடியிலிருந்து நழுவித் தும்பிக்கையில் ஓங்கி ஓர் அடி அடித்துவிட்டு வெகு சீக்கிரமாக அதன் கால்களின் மத்தியில் புகுந்து அமர்ந்தார். யானை அவர் இருக்குமிடம் தெரியாமல் தும்பிக்கையினால் இங்குமங்கும் தடவித் தடவிப் பார்த்தது. அதற்குள் அவர் பின்பக்கம் சென்று அதன் வாலைப் பிடித்து பாம்பை கருடன் இழுப்பதுபோல் இழுத்துக்கொண்டு வெகுதூரம் சென்றார். பிறகு வலமும் இடமுமாக அசைத்து அசைத்து இழுத்தார். யானை க்ருஷ்ணன் தன் வாலைப்பிடித்து வலப்பக்கமாகஇழுக்கும்போது வலப்பக்கமாகவும் இடப்பக்கமாக இழுக்கும்போது இடப்பக்கமாகவும் திரும்பித்திரும்பி அவரைப் பிடிக்க முயன்றது. இப்படித்தானும் சுழன்று அதையும் சுழலவைத்து வருத்திய பிறகு க்ருஷ்ணன் முன் பக்கம் போய் கையால் ஓங்கி அடித்து விட்டு ஓடினார்.

(தொடரும்)

(கரு) 'सकृदेव प्रपन्नाय.........अभयं सर्वभूतेभ्यो ददाम्येतद्व्रतं मम' என்கிறபடி, தேவரீர், ஒரு தடவை ப்ரபத்தி செய்தவர்களுக்கு அபயப்ரதானம் செய்வதை நித்ய வ்ரதமாகக்கொண்டிருக்கிறீர். தான் ப்ரதிஜ்ஞை செய்தவிஷயத்தில், 'रामो द्विर्नाभिभाषते' 'अनृतंनोक्तपूर्वंमे' என்று உம்முடைய வாக்யங்களினால் இரண்டாவது தடவை (மாற்றிப்) பேசுவதில்லை' என்பதும், ப்ரஸித்தம். தேவரீர் ப்ரதிஜ்ஞை செய்ததை தவருமல் அநுஷ்டிப்பதையும் விபீஷண, காகாஸுர, ஸுக்ரீவாதிகள் கண்கூடாகக்கண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட வ்ரதம், அகிஞ்சந கோஷ்டியில் மூர்த்தாபிஷிக்தனான (அத்யந்தம் அகிஞ்சநனான) அடியேன் விஷயத்தில் மாத்திரம் எப்படி வியர்த்தமாக ஆகும். ஒருக்காலும் வீணுகாது.

(அவதா) கரண களேபராதிகளையும் ஶாஸ்திரங்களையும் கொடுத்திருக்கிறேன். ஆகையால் ஶாஸ்திரத்தில் சொல்லப்பட்ட மார்க்கத்தில் ஸம்ஸார பயத்தை நீக்கிக் கொள்ளலாமே! என்கிற பகவானுடைய சங்கைக்கு பதில் அருளிச் செய்கிருர்.

अनुक्षण समुत्थिते दुरितवारिधौ दुस्तरे यदि क्वचन निष्कृतिर्भवति साऽपि दोषाविला ।
तदित्थ मगतौ मयि प्रतिविधानमाधीयतां स्वबुद्धिपरिकल्पितं सपदि रङ्गधुर्य त्वया ॥ १६

அநுக்ஷண ஸமுத்திதே துரிதவாரிதௌ துஸ்தரே
யதி க்வசந நிஷ்க்ருதிர் பவதி ஸாபி தோஷாவிலா ।
ததித்த மகதௌ மயி ப்ரதிவிதாநமாதீயதாம்
ஸ்வபுத்தி பரிகல்பிதம் ஸபதி ரங்கதுர்ய த்வயா ॥

(ப—ரை) ஹே ரங்கதுர்ய — ஸ்ரீரங்கத்திற்கு நிர்வாஹகனே! அநுக்ஷண—ஒவ்வொரு க்ஷணமும், ஸமுத்திதே-விருத்தியடைந்ததாயும், துஸ்தரே—தாண்ட முடியாததாயுமிருக்கிற, துரிதவாரிதௌ—பாபமாகிற ஸமுத்திர விஷயத்தில், (அல்லது, பாபம் நிறைந்த ஸம்ஸார ஸமுத்திரத்தின் விஷயத்தில்) க்வசந—ஒரு ஶாஸ்திரத்தில், நிஷ்க்ருதி: யதி-ப்ராயச்சித்தம் (சொல்லப்பட்டு) இருந்தாலும், ஸாபி—அந்த ப்ராயச்சித்தமும், தோஷாவிலா—தோஷத்தினுல் கலக்கமுள்ளதாக, பவதி—இருக்கிறது. தத்—ஆகையினுல், இத்தம்-இந்த ப்ரகாரம், அகதௌ—வேறு கதியில்லாத, மயி—என் விஷயத்தில், த்வயா—உம்மாலே, ஸ்வபுத்தி—தன்னுடைய (உம்முடைய) ஸங்கல்பத்தினுல், பரிகல்பிதம்—ஏற்படுத்தப்பட்ட, ப்ரதிவிதாநம்—பரிஹாரம், ஸபதி—உடனே, ஆதீயதாம்—செய்யப்படட்டும்.

(கரு) ஓ ரங்கநாத! இந்த ஸம்ஸாரமே ஓர் விலக்ஷணமான ஸமுத்திரம். உலகில் ப்ரஸித்தமான ஸமுத்திரம், கங்கை, முதலான அநேக நதிகளின் ஜலங்கள் ஸதா வந்துசேர்ந்துகொண்டிருந்த போதும் கொஞ்சம்கூட அபிவ்ருத்தி அடைவதில்லை. ஓடம் கப்பல் முதலியவைகளால் தாண்டக்கூடியதாயுமிருக்கிறது. இஸ்ஸம்ஸார ஸாகரமோ வென்றால்; 'यद्ब्रह्मकल्पनियुतानुभवेऽप्यनाश्यं तत्किल्बिषं सृजति जन्तुरिह क्षणार्धे' (இவ்வுலகில் ஒவ்வொரு ஜந்துவும் லக்ஷம் ப்ரஹ்ம கல்பகாலங்களநுபவித்தாலும் தீராத கொடிய பாபங்களை அரை க்ஷணத்தில் செய்து கொண்டிருக்கிறது.) என்கிற ரீதியில் ஒவ்வொரு க்ஷணந்தோறும் செய்யப்படுகிற பாபங்களால் மேல் மேலும் விருத்தியடைந்து கொண்டேயிருக்கின்றது. ஸாதாரணமாகத் தாண்டக்கூடாததாயுமிருக்கிறது. இந்த ஸம்ஸார துக்கஹேதுவான பாபங்களுக்கு ப்ராயச்சித்தமாக 'क्षीयन्ते चास्य कर्माणि तस्मिन् दृष्टे परावरे' என்கிற ஶாஸ்திரங்களால் பகவத் ஸாக்ஷாத்கார ஸ்வரூபத்தை அடைந்த

உபாஸநம் விதிக்கப்பட்டிருந்த போதிலும், அதுவும், அதிக ஆயாஸங்களால் ஸாத்யமாயும், விவேகம் விமோகம் முதலிய அநேக ஸாதநங்கள் நிறைந்ததாயும், வெகு காலம் கழித்து பலனைத்தரக் கூடியதாயுமிருப்பதால் அல்பாயுஸ்ஸுக்களாயும், அல்ப சக்திகளாயும், கால விளம்பத்தை ஸஹிக்காதவர்களாயுமிருக்கிற அடியேன் போன்றவர்களுக்கு அநுஷ்டிக்க அசக்யமாகிறது. ஆகையினால் வேறு கதியற்று நிற்கிற அடியேன் திறத்தில், ஸம்ஸார வ்யாதிக்குப் பரிஹாரமான உபாயத்தை விளம்பிக்காமல் உடனே தேவரீரே ஸங்கல்பிக்க வேண்டும். (அதாவது—ஶரணாகதி ரூபமான உபாயத்தில் தேவரீரே அடியேனை ப்ரவர்த்திப் பித்தருளவேணும் என்று கருத்து.)

(அவதா) உபாஸநத்தில் சக்தி யில்லை யென்றால் ஶரணாகதியை அநுஷ்டிக்கலாமே யென்ன, அருளிச் செய்கிறார்.

विषादबहुलादहं विषयवर्गतो दुर्जयात् बिभेमि वृजिनोत्तरस्त्वदनुभूतिविच्छेदतः ।
मया नियतनाथवानयमितित्वमर्थापयन् दयाधन जगत्पते दयितरङ्ग संरक्ष माम् ॥ १७

விஷாதபஹுளாதஹம் விஷயவர்க்கதோ துர்ஜயாத்
பிபேமி வ்ருஜிநோத்தரஸ்த்வதநுபூதிவிச்சேதத: ।
மயா நியதநாதவநயமிதித்வமர்த்தாபயந்
தயாதந ஜகத்பதே தயிதரங்க ஸம்ரக்ஷ மாம் ॥

(ப—ரை) தயாதந—தயையை தநமாய் உடையவனும், ஜகத்பதே—உலகிற்கெல்லாம் நாதனும், தயிதரங்க—ப்ரியமான ஸ்ரீரங்கத்தை உடையவனுமிருக்கிற ரங்கேச்வர!, வ்ருஜிநோத்தர:—அதிக பாபத்தை உடைய, அஹம்—நான், விஷாதபஹுளாத்—துக்கங்களால் அதிகமானதும், துர்ஜயாத்—ஜயிக்கமுடியாததும், த்வதநுபூதி—உம்முடைய அநுபவத்திற்கு விச்சேதத:—விச்லேஷத்தை (பிரிவை) உண்டு பண்ணுகிறதாயுமிருக்கிற, விஷயவர்க்கத:—சப்தாதி விஷயங்களின் ஸமூஹத்திலிருந்து, பிபேமி—பயப்படுகிறேன். த்வம்—நீர், அயம்—இவன், மயா—என்னால், நியதநாதவாந்—ஒரே நாதனை உடையவன், இதி—என்று, அர்த்தாபயந்—கல்பித்துக்கொண்டு, மாம்—என்னை, ஸம்ரக்ஷ—காப்பாற்றவேணும்.

(கரு) ஜகத்துக்கள் எல்லாவற்றிற்கும் நாதனாயிருந்தும், ஆச்ரிதர்களிடத்தில் தயையையே ப்ரதானமாகக் கொண்டு ஸ்ரீரங்கத்தில் வாஸம் செய்ய விரும்புகிற ஸ்ரீரங்கநாதனே! சிற்றின்பங்கள், துக்கம் நிறைந்தவைகளாயும், உம்முடைய அநுபவத்திற்கு இடையூறை உண்டு பண்ணுபவைகளாயுமிருக்கின்றன. அடியேன் அதிக பாபம் செய்தவனாயிருக்கிறபடியால் அந்த சிற்றின்பங்களை வெல்வதற்கு சக்தியற்றவனாய் நடுங்குகிறேன். ஆகையினால் 'தேவரீரையே நாதனாகக் கொண்டவன்' என்கிற காரணத்தை வைத்துக்கொண்டு தேவரீரே க்ருபை செய்து அடியேனை ரக்ஷிக்கவேணும்.

(அவதா) பரிபூர்ணனான எனக்கு ஜனங்களுடைய துக்கமும் க்ரீடையாகவே யாகிற தல்லவா! என்றால் அருளிச் செய்கிறார்.

निसर्ग निरनिष्टता तव निरंहसः श्रूयते तत स्त्रियुग सृष्टिवद्भवति संहृतिः क्रीडितम् ।
तथापि शरणागत प्रणयभङ्गभीतो भवान् मदिष्टमिह यद्भवेत्किमपि मास्मतज्जीहपत् ॥ १८

நிஸர்க நிரநிஷ்டதா தவ நிரம்ஹஸ: ச்ரூயதே
ததஸ்த்ரியுக ஸ்ருஷ்டிவத் பவதி ஸம்ஹ்ருதி: க்ரீடிதம் ।
ததாபி சரணாகத ப்ரணயபங்கபீதோ பவாந்
மதிஷ்டமிஹ யத்பவேத் கிமபி மாஸ்மதஜ்ஜீஹபத் ॥

(ப–ரை) ஹேத்ரியுக–ஜ்ஞாந, சக்தி, பல, ஐச்வர்ய, வீர்ய, தேஜஸ்ஸுக்களாகிற(மூன்று இரட்டை) ஆறு குணங்களையுடையவனே! நிரம்ஹஸ:–பாபமில்லாதவரான, தவ–உமக்கு நிஸர்க–ஸ்வபாவமாக, நிரநிஷ்டதா–க்லேசமில்லாமை, ச்ரூயதே–ச்ருதியில் கூறப்பட்டிருக்கிறது. தத:–ஆகையினால், ஸம்ஹ்ருதி:–ஸம்ஹாரமும், ஸ்ருஷ்டிவத்–ஸ்ருஷ்டிபோல், க்ரீடிதம்–விளையாட்டாகவே, பவதி–ஆகிறது. ததாபி–ஆனபோதிலும், சரணாகத–சரணமடைந்தவர்களிடத்திலிருக்கும், ப்ரணய–ஸ்நேகத்திலிருந்து, பீத:–பயந்த, பவாந்–தேவரீர், இஹ–இவ்வுலகில், யத்–எது, மதிஷ்டம்–எனக்கு இஷ்டமாக, பவேத்–இருக்குமோ, தத்–அப்படிப்பட்ட, கிமபி–ஒரு ப்ரயோஜநத்தை, மாஸ்மஜீஹபத்–விடும்படிசெய்யவேண்டாம்.

(கரு) ஜ்ஞாநம், சக்தி, பலம், ஐச்வர்யம், வீர்யம், தேஜஸ் என்கிற கல்யாணகுணங்களால் பரிபூர்ணனான தேவரீர், ‘கர்மவச்யராயிராமல், ஸர்வேச்வரனாகயிருக்கிறபடியால், ஜனங்களுடைய துக்கத்தினால் தேவரீருக்கு துக்கம் ஒன்றும் கிடையாது’ என்று ச்ருதி கூறுகிறது. ஆகையால் ஜகத் ஸ்ருஷ்டி எப்படி தேவரீருக்கு க்ரீடையாக இருக்கிறதோ அப்படியே ஸம்ஹாரமும் லீலையாகவேதானிருக்கிறது. ஆகிலும், **‘मित्रभावेन संप्राप्तं न त्यजेयं कथंचन’** என்றும், **‘अरिः प्राणान् परित्यज्य रक्षितव्यः कथंचन’** என்றும், (சரணாகதன் என்று வந்தவனை எப்படியும் விடமாட்டேன். சத்ருவாயிருந்தாலும் சரணாகதன், ப்ராணனை விட்டாவது எனக்கு காப்பாற்றத் தகுந்தவன் என்றும்) ஸாதிக்கிற தேவரீருக்கு, சரணாகதனை ரக்ஷிக்காமல் போனால் அவனிடம் தனக்கிருக்கும் ஸ்நேஹ விசேஷத்திற்கு பங்கம் நேரிடுமோ வென்று பயம் ஸ்வபாவமாகயிருக்கிறபடியால், ஸர்வஜ்ஞனான தேவரீர் அடியேனுக்கு இஷ்டமாக ஆகக்கூடிய ஒருப்ரயோஜநத்தை நழுவவிடாமல், செய்தருளவேணும்.

(அவதா) சரணாகதர்களிடமிருக்கும் பகவத் வாத்ஸல்யத்தை உபபாதிக்கிறார்.

कयांधुसुतवायसद्विरदपुङ्गवद्रौपदी विभीषणभुजङ्गमव्रजगणांबरीषादयः ।
भवत्पदसमाश्रिता भयविमुक्तिमापुर्यथा लभेमहि तथा वयं सपदि रङ्गधुर्यत्वया ॥ १९

கயாதுஸுதவாயஸத்விரதபுங்கவத்ரௌபதீ
விபீஷணபுஜங்கமவ்ரஜகணாம்பரீஷாதய: ।
பவத்பதஸமாச்ரிதா பயவிமுக்திமாபுர்யதா
லபேமஹி ததா வயம் ஸபதி ரங்கதுர்யத்வயா ॥

(ப–ரை) ஹே ரங்கதுர்ய–ஸ்ரீரங்கநாத! கயாதுஸுத–ப்ரஹ்லாதன், வாயஸ–காகாஸுரன், த்விரதபுங்கவ–கஜேந்திரன், த்ரௌபதீ–பாஞ்சாலி, விபீஷண–விபீஷணன், புஜங்கம–காளியன் என்கிற ஸர்ப்பம், வ்ரஜகண–கோபிகைகளின் ஸமூஹம், அம்பரீஷ–அம்பரீஷன் என்கிற மஹாராஜன், இவர்முதலியவர்கள், பவத்பதஸமாச்ரிதா:–தேவரீருடையதிருவடியையாச்ரியித்தவர்களாய், பயவிமுக்திம்–பயவிமோசநத்தை, யதா–எப்படி, ஆபு:–அடைந்தார்களோ, ததா–அப்படி, வயமபி–நாமும், ஸபதி–உடனே, த்வயா–உம்மால், (பயவிமோசநத்தை) லபேமஹி–அடையக்கடவோம்.

(கரு) ஹேரங்கேச்வர! 'சரணாகதன்' என்கிற சொல்லைத் தேடிக்கொண்டிருக்கிற ஸர்வ ரக்ஷகனான தேவரீருடைய திருவடிகளையாச்ரயித்து, ப்ரஹ்லாதன், ஹிரண்யகசிபுவினால் உண்டான நாநாவித பயத்திலிருந்தும், காகாஸுரன், ப்ரஹ்மாஸ்த்ர பயத்திலிருந்தும், கஜேந்திரன், முதலையின் பயத்திலிருந்தும், பாஞ்சாலி, கௌரவர்களுடைய பயத்திலிருந்தும், விபீஷணன், ராவணனிடமும் வாநரர்களிடமும் உண்டான பயத்திலிருந்தும், காளியன் என்ற கொடிய ஸர்ப்பம், க்ருஷ்ணரூபியான உம்முடைய பயத்தினின்றும், கோபிகாதிகள், ராக்ஷஸர்களிடமும், மழை, காற்று, முதலியவைகளிடமும் உண்டான பயத்தினின்றும் விமோசநத்தை அடைந்தார்கள். அப்படியே நாங்களும் தேவரீருடைய திருவடித் தாமரைகளை யாச்ரியித்து ஸம்ஸார பயத்தினின்றும் விமோசனத்தை அடையக்கடவோம்.

(அவதா) மேல் ச்லோகத்தில் தன் அபேக்ஷிதத்தை வெளியிடுகிறார்.

भयं शमय रङ्गधाम्न्यनितराभिलाषस्पृशां श्रियं बहुलय प्रभो श्रितविपक्षमुन्मूलय ।
स्वयं समुदितं वपुस्तव निशामयन्तः सदा वयं त्रिदशनिर्वृतिं भुवि मुकुन्द विन्देमहि ॥ २०

பயம் சமய ரங்கதாம்ந்ய நிதராபிலாஷஸ்ப்ருசாம்
ச்ரியம் பகுளயப்ரபோ ச்ரிதவிபக்ஷமுந்மூலய ।
ஸ்வயம் ஸமுதிதம் வபுஸ்தவ நிசாமயந்தஸ்ஸதா
வயம் த்ரதசநிர்வ்ருதிம் புவி முகுந்த விந்தேமஹி ॥

(ப-ரை) ஹே முகுந்த-முகுந்தனே! ப்ரபோ! ரங்கதாம்நி-ஸ்ரீரங்கஸ்தலத்திலிருக்கிற, அநிதராபிலாஷஸ்ப்ருசாம்-(தேவரீருடைய அநுபவம் தவிர) வேறு அபிலாஷையில்லாமலிருக்கும் பரமைகாந்திகளுக்கு, பயம்-பயத்தை, சமய-(தேவரீர்) போக்கடிக்கவேணும். ச்ரியம்-ஸம்பத்தை, பகுளய-வ்ருத்தி செய்யவேணும். ச்ரிதவிபக்ஷம்-ஆச்ரிதர்களுடைய விரோதி வர்கத்தை, உந்மூலய-வேரோடு நாசம் செய்யவேணும். வயம்-நாங்கள், தவ-தேவரீருடைய, ஸ்வயம்ஸமுதிதம்-ஸ்வயம் வ்யக்தமான, (ஒரு சில்பியால் செய்யப்படாமல் தானாகவே தோன்றினதான) வபு:-திவ்ய மங்களவிக்ரஹத்தை, ஸதா-எப்பொழுதும், நிசாமயந்த:-ஸாக்ஷாத்கரித்துக்கொண்டு, புவி-பூலோகத்தில், த்ரிதசநிர்வ்ருதிம்-நித்யஸூரிகளின் ஆனந்தத்தை, விந்தேமஹி-அடையக்கடவோம்.

(கரு) ப்ரபோ! ஸ்ரீரங்கத்தில் வாஸம் செய்பவர்களும், தேவரீருடைய ஸ்வரூபரூபாதிகளைக் காட்டிலும் வேறு (க்ஷுத்ர) பலன்களில் ஆசாலேசமுமில்லாமலிருக்கிற பரமைகாந்திகளுடைய விரோதி வர்க்கத்தை (காமக்ரோதாதிகளை) அடியோடு நாசம் செய்து தேவரீருடைய அநுபவ விச்சேதத்தினால் உண்டான பயத்தை நீக்கவேணும். மேலும், தேவரீருடைய அநுபவத்திற்குத் தகுந்த சமதமாதி குண ஸம்பத்தையும் (அல்லது, குணநுபவ கைங்கர்யங்களாகிற ஸ்ரீயையும், பாகவத ஸம்ருத்தியையும்) அபிவ்ருத்தி செய்யவேணும். இப்படிச் செய்வதினால் நாங்களும், **'आद्यमेतत्स्वयं व्यक्तं विमानं रङ्गसंज्ञितम्'** என்று ப்ரஸித்தமானபடியே ஸ்வயம் வ்யக்தங்களுள் முதலாவதான, ஸ்ரீரங்கசாயியான தேவரீருடைய திவ்யமங்கள விக்ரஹத்தை ஒருவித ப்ரதிபந்தமுமில்லாமல் ப்ரத்யக்ஷமாய் ஸேவித்துக்கொண்டு, **'सदा पश्यन्ति सूरयः'** என்று சொல்லப்பட்ட நித்யஸூரிகளின் ஆநந்தத்தை இப்புவனியில் எப்போதும் அநுபவிக்கக் கடவோம்.

ஸ்ரீ:

அன்னதாத: ஸுகீ பவ!

உப்பிட்டவரை உயிருள்ளளவும் நினை' என்ற முதுரையை அனுஸரித்து மேல் கண்டவாறு உணவு இட்டு உபசரித்தவரை வாழ்த்துதல் நம் ப்ராசீன ஆசாரம். மனிதனைச் சார்ந்த வஸ்துக்களில் அவன் உயிரே அவனுக்கு மிகவும் ப்ரியமானது. அது ஶரீரத்தில் தங்கி வாழவேண்டுமானால் உணவருந்துதல் இன்றியமையாததாகிறது. தம்முடையது என்று சொல்லிக்கொண்டு சிறிதளவு உணவும் உட்கொள்ள பலவித காரணங்களால் வழியில்லாத பேர் பலர் இருக்கலாம். 'பசித்தவர்களுக்குச் சோறு இடுதல்' என்னும் உயர்ந்த இந்த அன்னதான தர்மம் ஒன்று உலகில் இயங்கிவராமல் இருந்திட்டால், அந்தோ! அவர்கள் கதி என்னவது? க்ஷேமமுள்ள காலத்தையும், அங்ஙனமல்லாத க்ஷாம காலத்தையும் முறையே 'ஸுபிக்ஷம், துர்பிக்ஷம்' என்ற சொற்களால் நம் முன்னோர்கள் குறித்தனர். சேமம் நிறைந்த நற்காலம் இது என்பதற்கு அறிகுறி எங்கிலும் பசித்த வயிற்றுக்குப் போதுமான வளவு பிக்ஷை கிடைப்பதுதான். உண்மையில் காலம், தேசம் இவைகளின் செம்மைக்கும், வீட்டிலுள்ள ஜனங்களின் தார்மிக உணர்ச்சிக்கும் ஒரு போக்கு வீடு தான் அபேக்ஷிப்பவர்களுக்குச் செய்யும் அன்னதானம் ஆகும். இவ்வாறு எழுதும் நாம், மறைமுகமாக எக்காலத்திலும் எத்தேசத்திலும் பிக்ஷை வாங்கியே ஜீவிக்கவேண்டிய ஒரு கும்பல் இருந்து வரவேண்டும் என்று காரணமின்றி கூறுவதாய் நினைத்து நம்மேல் கோபம் கொள்ள வேண்டாம். ஶாஸ்த்திரங்களை நன்கு பராமர்சித்தால் ப்ரஹ்மசாரி, ஸந்யாஸி முதலியவர்கள் பிக்ஷை எடுத்தே ஜீவிக்கவேண்டியவர்கள் என்பது தேறும். உலகிலும் ஸந்தர்ப்ப வசத்தினாலும், அங்கஹீனாதிகளாலும் பலர் பிச்சைக்காரர்கள் ஆவதை நாம் தடுக்க இயலாது. எத்தனை பேர்களுக்குத்தான் உத்யோகம் வழங்கமுடியும். பிச்சைக்காரவிடுதிகள் கட்டி, அவர்களைக் காப்பது என்றாலும், அவ்விடுதிகளைக்கட்டவும், நிர்வஹிக்கவும், கௌரவமான பேர்களைக்கொண்டு பல கௌரவமான பிச்சைகளை பல இடங்களில் நடத்தவேண்டியிருக்கிறது. ஆக ஏதாவதொரு உருவத்தில் பிச்சை எடுக்கவே நேருகிறது.

'அன்னதானம் செய்வதினால் நாம் நமக்குத் தெரியாமலேயே ஒரு சோம்பேரிக் கூட்டத்தை வளர்த்து வருகிறோம்' என்பதும் பிசகான வாதம். அயலார் அன்னத்தை உண்பதால் ஏற்படும் பாபங்களைப்பற்றி ஶாஸ்த்ரங்களில் பறை சாற்றியிருப்பதை உணர்ந்த எந்த ஆஸ்திகன் தான் வேறு வழியிருக்கும்போது பிச்சையுண்ணியாய் பொழுதைக் கழிக்க நினைப்பான்' என்று நாம் பார்க்கவேண்டும். அல்லது உலக ரீதியில் தான் பிச்சையெடுப்பது பரம ஸுகமாகத் தோன்றுமா? வீடுகள் தோறும் வசை மொழிகள், பார்த்த இடங்களிலெல்லாம் பரிகாசங்கள், தாமதம், தரக்குறைவு அத்தனையும் திண்டாட்டமயம். கதியற்று இவன் கை ஏந்துகிறான் அத்தனை. பரிந்து பிச்சை யிட்டாலும் உழைத்து உண்பதிலேயே ஒவ்வொருவனுடைய உள்ளமும் செல்லும் என்பதுதான் உண்மை. ஆகையால் அபேக்ஷித்த பேர்களுக்கு அவச்யம் அன்னதானம் செய்ய வேண்டும். இந்த தானத்தின் பெருமையை 'சேஷ தர்மம்' சொல்லும் இதிஹாஸத்தின் மூலமாகச் சிறிது விளக்குவோம்.

ஸ்ரீ க்ருஷ்ணனைக் குறித்து தருமபுத்திரனின் கேள்வி எடுத்த உடனேயே எப்படி ஆரம்பிக்கிறது என்று பாருங்கள்.

'सर्वेषामेव दानानां यद्दानं सुमहत्फलम् ।
सद्यस्तुष्टिकरं चैव सर्वपापप्रणाशनम् ॥
त्वमेव वेत्सि तत्सर्वं लोकनाथ यदुत्तमम् ।

தானங்கள் எல்லாவற்றிலும் உயர்ந்தது எது என்று கேட்கிறேன். உயர்ந்தது என்பதற்கு

ஓர் அடையாளம் உண்டு. எந்த தானத்தினால் உடனேயே அபேக்ஷகனுக்குத் திருப்தி ஏற்படுகிறதோ அதுதான் உயர்ந்தது. அதைச் சொல்லவேணுமென்று கேட்டார். 'அன்னதானம்தான் அத்தகையது' என்று ஸ்ரீக்ருஷ்ணன் அருளிச்செய்யும்படி. 'பணம், துணி' முதலியவைகளைத் தானமாகக் கொடுத்திடினும் யாசகனுக்கு த்ருப்தி ஏற்படுகிறதே' என்று கேட்கலாம். ஆயினும் அது வெறும் மனத் தோற்றமே. அன்னம் உண்பதினாலோவெனில் உண்மையினாலேயே அவனுக்குத் தெரிந்தோ தெரியாமலோ வயிறு நிறைந்து பசிப்பிணி நீங்கி த்ருப்தி ஏற்பட்டுவிடுகிறது.

முன்னொருகாலத்தில் யோகபூஷணன் என்றொரு ப்ராஹ்மணன் வாழ்ந்து வந்தான். நன் மக்களையும் நிறையப்பெற்று தன, தான்ய ஸம்பத்துடன் ஸர்வ ஶாஸ்த்ர விசாரதனாய் அதிதிகளுக்கு அன்னதானம் செய்வதையே உத்தம தர்மமெனக்கருதி அவ்வாறே செய்து வந்தான். திக்கெட்டிலும் அவன் புகழ் எட்டலாயிற்று. தேவ ஸபையிலும் தேவேந்த்ரன் முன்பு அவனைப் பற்றி ப்ரசம்ஸையாக ப்ரஸ்தாவித்தார்கள்தேவதூதர்கள். தேவராஜனுக்கும் ஒரு குதூஹலம் உண்டாயிற்று. இவர்கள் சொல்லுவது நிஜமா என்று அப் பிராஹ்மணனிடம் நேரில் சென்று அறிய விரும்பினர். முன் கூட்டியே மனதினால் சில கார்யங்களை ஸங்கல்பித்துக்கொண்டான். ப்ரளய காலம் என்னலாம்படி மேகங்கள் அத்தனையும் திரண்டு ப்ராஹ்மணன் இருக்கும் இடத்தில் உச்சிவீடும் இன்றி ஆறேழு நாட்கள் அகண்ட வர்ஷமாய் மழை பொழியத் துடங்கின. அந்த ஊருக்கு நான்கு புறங்களிலும், பல காத தூரம் வரை ஒரே ஜலப்ரவாஹம் பெருக்கெடுத்து ஓட ஆரம்பித்தது. வயிற்றுள் ஜ்வலிக்கும் ஜாடராக்நியும், அணைந்திடும், அத்தகைய சீதம்ய விபரீதகாலத்தில் அவ் வீட்டைத்தேடி வ்ருத்த ப்ராஹ்மணன் ஒருவன் வந்துக்கொண்டிருந்தான். இளைத்தும், குறுகியும் போன அவன் சரீரம் ஊன்றுகோலின் உதவியால் மெல்ல ஊர்ந்து வரலாயிற்று. குழிந்து ப்ரகாசமற்ற அவன் கண்களிலும் பசியின் கொடுமை பார்க்கலாம்படி இருந்தது. எப்படியோ அந்த ப்ராஹ்மணன் வீட்டுவாயிலை அடைந்துவிட்டான். 'வந்தனம் வேதியரே! ஒரு வாய் சோறு வேணும்' என்று கேட்டான். கோழையின் 'கர்புர்' சப்தத்தில் அவன் தொண்டையிலிருந்து பேச்சு கூடஸரியாகக் கிளம்பவில்லை.

நம் வீட்டுக்கார விப்ரேந்த்ரனும் உடனே வாரிச்சுருட்டிக்கொண்டு எழுந்திருந்து வந்தவரை வரவேற்று அடிபணிந்து அவர் வரவினால் தானும் தன்னுடைமையும் நிறம் பெற்றதாகப் பலவாறு பேசி உபசரிக்க, வீட்டுக்குடையவளான ப்ராஹ்மணபத்னியும் மிகுந்த சுறுசுறுப்புடன், கொட்டும் மழையிலும், கட்டை விறகுகளைத் தேடி, நெருப்பை மூட்டி, நொடிப்பொழுதுக்குள் அந்த அகாலத்திலும் அன்னபாகம் செய்து முடித்தாள். உடனே நமது ப்ராஹ்மணனும் கிழவரின் கால்களைக் கழுவி அந்நீரை சிரஸ்ஸில் ப்ரோக்ஷித்துக்கொண்டு மணையில் இருத்தி தரைடைத் துடைத்து, தலைவாழை இலையில் அன்னம் பரிமாறி வந்தவரை விஷ்ணுவென்றே நினைத்துத் தண்டமிட்டு அமுது செய்ய வேண்டினான்.

அந்தோ! என்ன சோதனை காலம் இது. மற்றும் ஒரு நூறு ப்ராஹ்மணர்கள் அப்போது அங்கு வந்து சேர்ந்தனர். முதியவர்கள், வயது வந்தவர்கள், சிறியவர்கள் பலதிறப்பட்டவர்கள். ஆனால் அதில் எவரும் பசியின் கொடுமைக்குத் தப்பினவர்களாகத் தெரியவில்லை. ஸூர்யனைப்போல் ஜ்வலிக்கும் ப்ரஹ்மவர்ச்சஸ்; எதிர்த்துச் சொன்னால் எரித்துவிடுவார்கள் போலும். இதில் ஒரு விசேஷம். அன்னத்தை யாசிப்பதற்கு 'ஸ்வாமி' என்று வாய் திறந்தவர்கள் மேல் வாக்யத்தை முடிக்கமாட்டாமல் மூர்ச்சையானார்கள். இப் பரிதாபத்தைப் பார்த்த பழைய கிழவன், கையை உதறி உண்ணாமலேயே எழுந்துவிட்டான். ப்ராஹ்மணனே! புதியவர்களும் பசியினால் வாடுகின்றனர். சீக்கிரமே சமையல் செய்து அவர்களையும் சாப்பிட அழைப்பாயாக. அப்பொழுதே நான் அவர்களுடன் உண்ண உட்காருவேன்.

தனித்திருந்து நான் சாப்பிட ஸம்மதியேன், என்று சொல்லி சாப்பிட மறுத்துவிட்டான். அப்பொழுது ப்ராஹ்மணன் தன் மனைவியை அழைத்துச் சொன்னான்:- 'சீக்கிரமே சமைப்பாயாக; எல்லாரும் பட்டினியால் வாடுகின்றனர்' என்னவும், மனையாளுக்கு மனக்கவலை வந்துவிட்டது. மெல்ல நெருங்கி விறகில்லாமல் தான் படும் வேதனையை பர்த்தாவுக்குத் தெரிவித்தாள். க்ஷணகாலம் யோசனையில் ஆழ்ந்து அந்தணன் சொல்லுகிறான்:—

'वस्त्राणि च बहून्यत्र घृततैलघटास्तथा। संयोज्य वर्तिकान्तेषु दीपयस्व यथामति' நல்ல காலம்; நம் வீட்டில் துணிகள் நிறைந்திருக்கின்றன. நெய், எண்ணெய் குடங்களுக்கும் குறைவில்லை. துணிகளைச் சுருட்டித் திரியாகத் திரித்து அவைகளில் தோய்த்து தீயை வளர்த்து பாகம் செய்வாயாக. உனக்குத் தோன்றினபடிசெய்' என்று இப்படிச் சொன்னதும், அவள் அப்படியே செய்து சமைத்துவந்தாள். உயர்ந்த பட்டுக்களும், பீதாம்பரங்களும் கொளுத்தப்பட்டன. கொடியில் காயும் அவைகளும் பெட்டியில் பத்திரம் செய்யப்பட்டவைகளும் வெளிவந்து வெந்து ஒழிந்தன. பெரியோர்களுடையதும், பாலர்களுடையதும் எல்லாம் பஸ்மமாயின. உடுத்தி இருப்பவை போக சிறிது துணியும் சேஷமில்லை. ஆயினும் என்ன? பாகம் பூர்த்தியடையவில்லை. பதார்த்தங்கள் பாதியளவே பக்வமாகியிருந்தன. என்னே! தெய்வசோதனை. காலமோ கடுகிச் சென்று கொண்டிருந்தது. பாகம் முடிவடைந்ததாவென்று பார்க்க வந்த பர்த்தாவினிடம் மனைவி மெல்ல விஷயத்தை விஜ்ஞாபித்தாள். அதிதிகளின் அவதிகளையே நினைத்திருக்கும் அவனுக்கு இந்த வார்த்தைகள் அளவில்லாத கோபத்தை உண்டாக்கின.

கண்கள் அனலைக் கக்க, ஒரு பாவமும் செய்தறியாத அப் பதிவ்ரதையைப் பார்த்து ப்ராஹ்மணன் சொல்வான்:- **दुःखिताश्चैव तिष्ठन्ति क्षुधिता ब्राह्मणोत्तमाः। पादौ प्रसार्यते वाग्नौ कुरु पाकं हि हुर्जने ॥'** கைப்பிடித்தவளின் குணநலங்களை நெடுங்காலமாய் அறிந்து இருந்தும், இப்பொழுது அவளை துர்ஜநே- துர்ஜநஸ்வபாவமுள்ளவளே! என்று அழைக்கிறான். 'வாச்யாவாச்யம் ந ஜாநீதே க்ருத்தோ ஹந்யாத் குரூநபி' என்றபடி கோபம் பேசுவிக்கும் பேச்சு இது. ப்ராஹ்மணர்களின் அல்லல்கள் உனக்குத்தெரியாதனவா? அவர்கள் திண்ணையில் பசியுடன் முடங்கிக் கிடக்க இதுவென்ன விளையாட்டு? உன் கால்களையாவது ஒடித்து வை. சமையல் ஆகட்டும் சீக்கிரம்' என்று சீறி விழுந்தான். யாகத்தில் எல்லாவற்றையும் தானம் செய்யும் தன் தகப்பனாரைப் பார்த்து அடிக்கொரு தரம் 'என்னை யாருக்குக் கொடுக்கப்போகிறீர்' என்று பிள்ளை தொந்தரை செய்ய, தகப்பனாரும் அதற்குப் பொறுதவராகி 'உன்னை யமனுக்குக் கொடுத்தேன் போ' என்று கோபித்துச் சொல்ல அவனும், அவர் சொல்படி யமலோகத்துக்குப் புறப்பட்டான், என்று கடோபநிஷத் கதை ஒன்று சொல்லும். அது மாதிரியே பதிபக்தியினால் இந்த மாது சிரோமணியும் யாதொரு வேதனையுமின்றி நொடியில் பாகத்தை செய்து முடித்தாள். முழங்தாள் வரை வெந்து முடமானாள். கடமை உணர்ச்சியால் உந்தப்பட்ட இந்த க்ருஹஸ்தனும் அதைப்பற்றி கவலை கொள்ளவில்லை. ப்ராஹ்மணர்களை அழைத்து வரிசையாக இருத்தி தானே இலையில் அன்னம் படைக்க இவன் ஆரம்பித்தபொழுது முதலில் வந்த வ்ருத்தப்ராஹ்மணன் சொல்லுவான்:- உன் மனைவியைக் கூப்பிட்டுப் பரிமாறச் சொல்லுவாயாக. க்ருஹிணீ க்ருஹமுச்யதே, யஸ்ய பார்யா க்ருஹே நாஸ்தி ஸத்வ்ருத்தா தர்மசாரிணீ | அரண்யம் தேந கந்தவ்யம் யதாऽரண்யம் ததா க்ருஹம் || மனைவியற்றவிடம் மனையாகாது. அது தான் காடு. பலம் ஹி யோகிநாம் மௌநம் த்விஜாதீநாம் ச்ருதம் ப(ஒ)லம் | பத்நீ ப(ஒ)லம் க்ருஹஸ்தாநாம் பக்ஷோ வை பக்ஷிணாம் ப(ஒ)லம் || அந்நம் ப(ஒ)லம் மநுஷ்யாணாம் புருஷாணாம் தநம் ப(ஒ)லம் | ராஜா ப(ஒ)லம் துர்ப(ஒ)லாநாம் யோதாநாக்து த்ருதிர் ப(ஒ)லம் || ஆகையால் அவள் பரிமாறுவிடில் நாங்கள் போஜநம் செய்யப்போவதில்லை. இவ் வார்த்தையைக் கேட்ட அந்த

ஸ்ரீ:

43-வது பட்டம் ஸ்ரீஅழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

[குறிப்பு:— ஜய ௵ சித்திரை ௴ வெளிவந்ததில் 124-வது பக்கத்தில் "மங்களாஸாஸனம் செய்தருளியாயிற்று" என்று முடிகிற பாராவிற்கு மேல் சேர்த்துக்கொள்ளவேண்டிய விஷயம்.

ஸம்பாதகர்]

20-3-54 மத்யாஹ்னம் எரணாகுளத்திலிருந்து அட்வகேட் ஸ்ரீவரதராஜ ஐயங்கார், ஸ்ரீவெங்கடராகவ ஐயங்கார் முதலானவர்களுடனும் இந்தியன் பாங்க் ஸ்ரீபார்த்தஸாரதி ஐயங்காருடனும் வந்து ஸ்ரீஅழகியசிங்கரைத் தெண்டன் ஸமர்பித்து எரணாகுளமெழுந்தருளவேண்டுமென்றும், அவ்விடமுள்ள ப்ராஹ்மணஸமூஹத்தார் ஸ்ரீஅழகியசிங்கர் ஊர்வலமாக வீதியில் எழுந்தருளுவதை ரொம்பவும் ப்ரதீக்ஷிக்கிறபடியால் இரவு 11 மணிக்கு அவச்யம் எழுந்தருளவேண்டுமென்றும் ப்ரார்த்தித்தார்கள். அவர்கள் ப்ரார்த்தனைக்கிணங்கி அன்று ராத்திரி ஸ்ரீந்ருஸிம்ஹன் ஆராதனத்தைச்செய்துகொண்டு 8-30 மணிஸுமாருக்குப் புறப்பட்டு எழுந்தருளியாயிற்று. எரணாகுளத்தில் உள்ளவர்கள் பாண்டியன் ஸமூஹமடத்திலிருந்தும், பாலக்காடுஸமூஹமடத்திலிருந்தும் பூர்ணகும்பத்துடனும்நாநாவித உபஹாரங்களுடனும் ஸமூஹமாக வந்து எதிர்கொண்டழைத்து வேதகோஷங்களுடன் வீதிவலமாக ஸமூஹமடத்திற்கு எழுந்தருளப் பண்ணிக்கொண்டு போனார்கள். அவ்விடம் எழுந்தருளியதும் ஸ்ரீஅழகியசிங்கரிடம் நியமனமும் பலமந்த்ராக்ஷதையும் பெற்றுக் கொண்டுபோனார்கள். மறுநாள் (21-3-54) எரணாகுளம் அட்வகேட் ஸ்ரீவரதராஜ ஐயங்கார் பெருமாளுக்குப்பெரிய திருமஞ்சனமும் விசேஷ ததீயாராதனமும் இரவு டோலோத்ஸவத்தையும் செய்துவைத்தார். அன்று அவர் தம்குமாரனுக்கு ஸமாச்ரயணமும் தனக்கு பரஸமர்ப்பணமும் செய்து கொண்டார். மறுநாள் ஸ்ரீவெங்கடராகவ ஐயங்கார் ஊரில் உள்ள ப்ரமுகர்களுடன் கலந்து ததீயாராதனையை நடத்திவைத்து ஏகதேசத்தில் விசேஷ தளிகையுடன் டோலோத்ஸவமும் செய்துவைத்தார். ஊரில் எல்லோருடைய ப்ரார்த்தனையின்பேரில் ஸ்ரீஅழகியசிங்கர் செய்தருளின உபந்யாஸத்தில் ப்ராசீன ஆசாரங்களை

ணன் மடைப்பள்ளியை அடைந்தான். அங்கு அதிதிக் கிழவரின் வார்த்தையைக் கேட்டு நடுங்கிக் கொண்டிருக்கும் மூடமான தன் மனைவியைக் கண்டான். அவன் செய்த தவறு அவனுக்கு அப்பொழுது தான் தெரிந்தது. செய்வது இன்னதென்றறியாமல் கலங்கினான். 'த்வம் தர்ம: த்வம் ப்ரியா: ப்ராணா: தேவதா ச த்வமேவ மே। அதிதீநாம் அடம் தர்ம: த்வய்யேவ பரிவர்த்ததே॥' என்று பத்நியின் மகிமையை உணர்ந்தான். பலவாறு புலம்பி கடைசியில் மூர்ச்சையானான். உடனே பர்த்தாவின் நிலையைக் கண்டு கலங்கினாளானாலும் ப்ராஹ்மணர்கள் பசியால் வாடுவதை நினைத்து பலவாறு ப்ரயத்னம் செய்து அவர்களுக்குத் தானே பரிமாற ஆரம்பித்தாள். அப்பொழுது அங்கு வந்திருந்த அத்தனை அந்தணர்களும் ஒரே ஜ்யோதிரூபமாக ஆகாசத்தில் தோன்றி நின்றார்கள். முதலில் வந்த கிழவரும் இந்திரனாகக் காட்சியளித்தார். அப்பொழுதுதான் இந்த தம்பதிகளுக்குத் தங்களை தேவர்கள் சோதிக்க வந்த விஷயம் தெரிந்தது. சோதனையில் தேறிய அந்த தம்பதிகளை வெகுவாக ஆசீர்வாதம் செய்து தேவர்கள் ஸ்வர்க்கம் ஏகினார்கள்.

இம்மாதி யுதிஷ்டிரருக்கு ஸ்ரீ க்ருஷ்ணனால் அருளிச்செய்யப்பட்டிருக்கிறது ஒன்றே போதும் அன்னதானத்தின் பெருமைக்கு ப்ரமாணம் ஆக.

விடக்கூடாது; ஸநாதன தர்மத்தை அவச்யம் அநுஷ்டிக்கவேண்டுமென்மதை விரிவாக எடுத்தருளியாயிற்று. ஜஸ்டிஸ் ஸ்ரீசுப்ரமண்ய ஐயர் முதலிய ஸநாதன தர்மத்தில் அபிமானமுள்ளவர்கள் அதைக்கேட்டு ரொம்பவும் ஸந்தோஷப்பட்டார்கள். உபந்யாஸத்திற்குப் பிறகு மறுநாள் அதன்படி சிலர் கிராப்பை விட்டு ஶிகையும் வைத்துக்கொண்டு ஸ்ரீ அழகியசிங்கரைத் தெண்டன் ஸமர்ப்பித்தார்கள். ராத்திரி ஆராதனம் முடிந்ததும் 10 மணி ஸுமாருக்குப் புறப்பட்டு திருப்பணித்துறைக்கு எழுந்தருளினர்.

அன்று ராத்திரி (4-4-54)ல் திருவாரன்விளையிலிருந்து புறப்பட்டு 8 மைல் தூரத்திலுள்ள பந்தளத்திற்கு எழுந்தருளியாயிற்று. அங்கு ராஜவம்சத்தைச்சேர்ந்தவரின் பங்களாவில் எழுந்தருளியிருந்து 5-4-54 ராத்ரி புறப்பட்டு 13 மைல் தூரத்திலுள்ள கொளக்கடாவில் நம்பூத்ரி சத்ரத்திலெழுந்தருளியாயிற்று. அவர் அன்று ததீயாராதனைக்கு வேண்டிய ஸாமான்களை ஸமர்ப்பித்து ஆராதித்தார். 6-4-54 இரவு புறப்பட்டு 8 மைல் தூரத்திலுள்ள கொட்டாரக்கரையில் தேவஸ்வத்தைச் சேர்ந்ததான யாத்ரிகர் பங்களாவில் எழுந்தருளியிருந்து மறுநாள் 7-4-54 ஆராதனத்தை முடித்துக்கொண்டு 8 மைல் தூரத்திலுள்ள வாளநத்தில் மஹாராஜாவின் பங்களாவிலெழுந்தருளியிருந்தார். அங்கிருந்து 8-4-54 இரவு புறப்பட்டு 9 மைல் தூரத்திலுள்ள உடையமங்கலத்திற்கெழுந்தருளினர். 9-4-54 இரவு அவ்விடத்திலிருந்து புறப்பட்டு 8 மைல் தூரத்திலுள்ள கிளியனூரில் போத்திமடத்திற்கு எழுந்தருளியாயிற்று. மறுநாள்10-4-54 அங்கு எழுந்தருளியிருந்தாயிற்று. 11-4-54 ஸ்ரீ ராமநவமி தினம் ஸ்ரீமத்ராமாயணபாராயணம் நடந்தது. ஸ்ரீ அழகியசிங்கர் விசேஷார்த்தங்களை ஸாதித்தாயிற்று. அங்கு எழுந்தருளியிருந்த இரண்டு தினங்களிலும் திருவனந்தபுரத்திலிருந்து சிலர் வந்து பெருமாளை ஸேவித்து ஸ்ரீ அழகியசிங்கரையும்தெண்டன்ஸமர்ப்பித்து ஸ்ரீ அழகியசிங்கரை திருவனந்தபுரம் எழுந்தருளும்படி ப்ரார்த்தித்தார்கள். கொட்டாரக்கரையிலிருந்தே ஸ்ரீ என். க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் அட்வகேட் தினந்தோறும் வந்து ஸ்ரீ அழகியசிங்கரை தெண்டன் ஸமர்ப்பித்துவிட்டு ஸ்ரீ அழகியசிங்கர் ஸஞ்சாரம் புறப்பட்டு மறுபடியும் தங்குமிடத்திற்கெழுந்தருளும்வரைக்கும் கூட விருந்து வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டு தங்கினவுடன் நியமனம் வாங்கிக்கொண்டு போய்வந்துகொண்டிருந்தார். அன்று மத்யாஹ்னம் திருமஞ்சனம் ஆராதனம் முடிந்ததும் புறப்பட்டு மாலை 6 மணிக்கு 7 மைல் தூரத்திலுள்ள ஆற்றங்கரையிலிருக்கும் ப்ராஹ்மண அக்ரஹாரத்திற்கெழுந்தருளியாயிற்று. ப்ராஹ்மணர்சள் பூர்ணகும்பத்துடனும் வேதகோஷங்களுடனுமெதிர்கொண்டுவந்து வரவேற்றார்கள். இரவு 2மணிக்குப் புறப்பட்டு 11 மைல் தூரத்திலுள்ள கழக்கூட்டத்திற்கெழுந்தருளினர். அங்கு தேவஸ்வம் ஸ்ரீகண்ணன் ஸன்னிதியில் 12-4-54 உதயத்திற்கெழுந்தருளினர். அன்று அங்கு எழுந்தருளியிருந்து இரவு புறப்பட்டு திருவனந்தபுரத்தைச் சேர்ந்த கைதமுக்கிலிருக்கும் ஸ்ரீ எஸ். பத்மநாப ஐயங்கார் க்ருஹத்திற்கு திருவனந்தபுரம் ஸ்தலவாஸிகளனைவரும் பூர்ணகும்பத்துடன் வரவேற்க எழுந்தருளினர். மறுநாள் காலை அபிகமந ஆராதனம் முடிந்ததும் எல்லா ஸ்ரீவைஷ்ணவர்களும் ஊரிலுள்ள ஆஸ்திகர்களும் பூர்ணகும்பத்துடனும் வேதகோஷங்களுடனும் வந்து ஸ்ரீ அழகியசிங்கரை ப்ரார்த்திக்க, ஸ்ரீ அழகியசிங்கர் தந்தப் பல்லக்கில் திருவீதிவலம் வந்தார். பெருமாள் தங்கப்பல்லக்கில் எழுந்தருளினர். அநேகர் வேதபாராயணம் செய்துகொண்டு அநுயாத்ரையாக வந்தார்கள். வழிநெடுக ஜனங்கள் திரள் திரளாகக்கூடி ஸேவித்தார்கள் கிழக்கு கொட்டாரத்தருகில் வந்ததும் திருவாங்கூர் மஹாராஜாவின் ப்ரதிநிதியான மெய்க்காப்பாளர் ஸ்ரீ டி. சிவராமன் அரண்மனை சிப்பந்திகளுடன் ஸ்ரீ அழகியசிங்கரை வரவேற்றார்.

மத்யாஹ்னம் ததீயாராதனம் நடந்தது. மாலையில் ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீபத்மநாபஸ்வாமியை மங்களாசாஸநம் செய்யத் தம் பிருது

களுடன் எழுந்தருளினர். கோவிலின் மேல் வாசலை யடைந்தபோது ஸ்ரீபத்மநாப ஸ்வாமி தங்கப்பல்லக்கிலும் ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹன், ஸ்ரீக்ருஷ்ணஸ்வாமி வெள்ளிப்பல்லக்குகளிலும் எழுந்தருளினர். பெருமாள் உள்ளே எழுந்தருளியதும் ஸ்ரீஅழகியசிங்கரை எக்ஸிக்யூடிவ் ஆபீஸர் ப்ரார்த்திக்க ஒற்றைக்கல் மண்டபத்திலிருந்து ஸ்ரீபத்மநாப ஸ்வாமியை திருவடிமுதல் திருமுடிவரையில் மூன்று வாசல்களிலும் ஆழ்வாருடைய „கெடுமுடராயவெல்லாம்'' என்கிற பாசுரங்களால் மங்களாசாஸனம் செய்தார். ஸ்ரீபத்மநாபனுக்கு உயர்ந்த பொன்னுடை ஒன்று ஸ்ரீஅழகியசிங்கரால் ஸமர்ப்பிக்கப்பட்டது. பிறகு ஸ்ரீந்ருஸிம்ஹன், கண்ணன் ஸந்நிதிகளிலும் மங்களாசாஸனம் செய்தார். அங்கிருந்து உள்ளூர் ஸ்ரீஅஹோபிலமடத்திற்கெழுந்தருளி ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகனை மங்களாசாஸனம் செய்துவிட்டு அப்படியே கிழக்கு கொட்டாரத்திற்கு எழுந்தருளினர். வராஹநயினர்ஸன்னிதிக்கெழுந்தருளி திரும்பி வரும்போது ஸ்ரீநிவாஸன் ஸன்னிதிக்குமெழுந்தருளி மங்களாசாஸனம் செய்தபிறகு கொட்டகத்திற்கெழுந்தருளினர். எப்ரல் மீ 15வ ஊர்வாஸிகள் விசேஷ ததீயாராதனம் செய்துவைத்தார்கள். அன்றையதினம் மாலை பெருமாளுடன் ஸ்ரீஅஹோபிலமடத்திற்கெழுந்தருளும்போது அவரவர்கள் ப்ரார்த்தித்த வீதி வழியாக எழுந்தருளினர். எல்லா ஜனங்களும் தீப அலங்காரங்கள் செய்து ஹாரத்தி எடுத்து ஸ்ரீஅழகியசிங்கரை தெண்டன் ஸமர்ப்பித்தார்கள். அன்றையதினம் மடத்தில் ப்ரதோஷாராதனம் டோலோத்ஸவம் செய்துவைத்தார்கள். பத்துமணிக்கெல்லாம் ஸ்ரீஅழகியசிங்கர் டோலையின்போது ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுக்கு மரியாதையானவுடன் பெருமாளுடன் கிழக்கு கொட்டாரத்திற்கெழுந்தருளினர். எப்ரல் மாதம் 16வ ஸ்ரீபத்மநாபருக்கு ஆறாட்டு (தீர்த்தவாரி) உத்ஸவம். அன்று காலை ஸ்ரீபத்மநாபஸ்வாமியை ஸேவித்துவிட்டு அங்கிருந்து மஹாராஜா ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனையும் ஸ்ரீஅழகியசிங்கரையும் ஸேவிப்பதற்காக தமது பரிவாரங்களுடனும், விசேஷ உபஹாரங்களுடனும், உயர்ந்த சால்வைகள், பட்டுகள், 52 ஸவரன், மூன்று வடம் தங்கச்சங்கிலி ஆகியவற்றுடனும் வந்தார். இவற்றை பாதகாணிக்கையாக ஸமர்ப்பித்து, ஸ்வாமிகள் இங்கு எழுந்தருளியது தனக்கும் தன் தேசத்திற்கும் பாக்யமென்று மஹாராஜா தமிழில் தெரிவித்துக் கொண்டார். ஸ்ரீஅழகியசிங்கரு மவரை அன்புடன் வரவேற்று ந்ருஸிம்ஹாவதாரத்தின் பெருமையையும், ஸ்ரீஅஹோபிலமாஹாத்ம்யத்தையும், நவ ந்ருஸிம்ஹரைப் பற்றிய விவரங்களையும், லோகோஜ்ஜீவநார்த்தமாக ஸ்ரீஅஹோபிலமடம் ஸ்தாபிக்கப்பட்ட விவரங்களையும், மாலோலன் ரங்கநாதனைப்போல் பெரியபெருமாள் என்று வழங்கிவருவதற்கான காரணங்களையும் ஸாதித்தருளினர்.

மஹாராஜாவும் நாஸ்திகம் வளர்ந்து வருமிக் காலத்தில் இம்மாதிரி மஹான்கள் ஸஞ்சாரம் செய்வது தேசத்துக்கு மிகுந்த நன்மையை உண்டுபண்ணுமென்றும் ஆங்காங்கு ஜனங்கள் ஸ்வாமிகளை பக்தியுடன் தர்சிக்க வருவதாகக் கேட்டுத் தமக்கு மிகுந்த ஸந்தோஷமேற்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். பிறகு ஸ்ரீஅழகியசிங்கர் மஹாராஜாவுக்கு மந்த்ராக்ஷதை, பெருமாள் ப்ரஸாதம், பஹுமானம் முதலியன கொடுத்தருளினர். மஹாராஜாவும் ஆராதகர்கள், வித்வான் (41-வது பட்டம் ஸ்ரீஅழகியசிங்கர் குமாரர்) கோபால ரங்காசாரியர் ஸ்வாமி ஆகியவர்களுக்கு சால்வையும், ஸ்ரீகார்யம், தையார், ஜோஸ்யம், வித்வான் ரங்காசார்ய ஸ்வாமிக்கும், ஏஜண்டு ஸ்ரீகோபால ஸ்ரீநிவாஸாசார்யருக்கும் தோடாவும், மற்றுமுள்ள ஸ்ரீஸன்னிதி கைங்கர்யபரர்களுக்கு யதோசிதம் ஸந்மானமும் செய்தார். மஹாராஜாவுடன் வந்த தீக்ஷிதர், மெய்க்காப்பாளர் முதலியோர்களுக்கு ஸ்ரீஅழகியசிங்கர் ஸந்மானம் செய்தருளினர். மஹாராஜா நிரம்ப ஸந்தோஷத்துடன் ப்ரஸாதம் பெற்றுச் சென்றார்.

எப்ரல் மாதம் 16ந்தேதி ஸாயங்காலம் ஊரிலுள்ள ப்ரமுகர்களின் ப்ரார்த்தனையின்பேரில்

பத்மநாபன் விஷயமான "புண்யம் செய்து" என்கிற பாசுரத்தை உபக்ரமித்து அதிலிருந்து ஶிகை முதலிய ஸநாதன ஆசாரங்களை விடக்கூடாது என்கிற விஷயத்தையும் எடுத்து மனத்தில் பதியும்படி ஸாதித்தாயிற்று. அன்று ராத்ரி மதராஸ் அஸோஸியேடெட் டிரேட்டர்ஸ் ஸ்ரீக்ருஷ்ணஐயங்கார் டோலோத்ஸவமும் 17-4-54 காலை பெரிய திருமஞ்சனமும் பண்ணிவைத்தார் 18௳ இரவு அட்வகேட் ஸ்ரீ என். க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் க்ருஹத்திற்கெழுந்தருளினார். 18-4-54 திநம் ஷை ஸ்ரீ க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் விசேஷமாக ஆராதித்தார். 19-4-54 ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ ஐயங்கார் க்ருஹத்திற்கெழுந்தருளினார். அன்று விசேஷமாக பெருமாளுக்கு டோலோத்ஸவமும் நடந்தது. அன்று ஸ்வாதி பெரிய திருமஞ்சனம் அவர் பண்ணிவைத்தார். அவருடையவும் மற்றுமுள்ள ப்ரமுகர்களுடையவும் ப்ரார்த்தனையின்பேரில் ராத்ரி அவர் செய்த டோலோத்ஸவத்தில் உபந்யாஸம் செய்தருளியாயிற்று. ராத்ரி டோலோத்ஸவமானதும் அங்கிருந்து புறப்பட்டு 12 மைல் தூரத்திலுள்ள நெய்யாத்தங்கரைக்கெழுந்தருளியாயிற்று. அவ்வூரில் ஆற்றங்கரை ஓரத்திலுள்ள கொட்டாரத்தில் எழுந்தருளியிருந்தார். அவ்வூரில் கேரள அரசர்களில் ரொம்பவும் ப்ரஸித்தனாயிருந்த மார்த்தாண்டவர்மா எதிரிகள் கையிலிருந்து தப்ப கண்ணனுடைய ஸேவை கிடைத்து நியமித்ததின்பேரில் பலாமரத்தின் பொந்தில் ஒளிந்து தப்பினதாகவும் பிறகு தன்னுடைய ராஜ்யத்தைத் தான் ஸ்வாதீனம் பண்ணிக்கொண்டு தனக்குப் பெருமாள் ஸேவை ஸாதித்தபடியே கண்ணனை எழுந்தருளப்பண்ணி கோயில் கட்டி ஆராதித்து வந்ததாயும் சில மாதங்கள் அங்கேயே தங்கியிருந்து கூட பெருமாளை ஸேவித்து வந்ததாயும் சரித்ரம் சொல்லிக்கொள்ளுகிறார்கள். அந்தக்கோயிலுக்கு ஷை கோயில் அதிகாரிகளின் ப்ரார்த்தனையின்பேரில் எழுந்தருளினார். பெரியாழ்வார் கண்ணன் பால்யசேஷ்டிதத்தை அநுஸந்தித்திருக்கிறபடி கண்ணன் எழுந்தருளியிருப்பதையும் பழைய பலாமரத்தையும் கண்டு உகந்தருளினார். அன்று ராத்ரி புறப்பட்டு 11 மைல் தூரத்திலுள்ள குழித்துறை தேவஸ்வத்தைச் சேர்ந்த தேவஸ்தானத்திற்கெழுந்தருளினார். 21-4-54 ராத்ரி அங்கிருந்து புறப்பட்டு 7 மைல் தூரத்திலுள்ள திருவாட்டாறு கொட்டாரத்தில் எழுந்தருளியிருந்தார். மறுநாள் காலை தேவஸ்தான அதிகாரிகள் பெருமாளை மங்களாசாஸனம் பண்ண ப்ரார்த்தித்தார்கள். லேசாக மழையும் பெய்துகொண்டிருந்தது. அவர்களுடைய ப்ரார்த்தனையின் பேரில் வாட்டாற்றெம்பெருமான் ஸன்னிதிக்கெழுந்தருளியாயிற்று. அத்தேசவழக்கப்படி கோயில் ஸ்த்ரீ புருஷபரிஜனங்கள் ஜயகோஷத்துடன் வரவேற்றார்கள். அனந்தபத்மநாபன் மாதிரி சயன திருக்கோலத்துடன் மூன்று வாசல்களில் பெருமாள் ஸேவை ஸாதிக்கிறார். பெருமாளை பல்லாண்டு தொடங்கி "அருள் பெருவார்" என்கிற திருவாய்மொழியை அநுஸந்தித்து கோஷ்டியாக மங்களாசாஸனம் செய்தருளியாயிற்று. வாட்டாற்றெம்பெருமானும் அனந்தபுரநகர் ஆதியும் ஒருவருக்கொருவர் அபிமுகமாக எழுந்தருளி யிருக்கிறார்கள். ஸாயங்காலமும் பானகாராதனமானதும் மறுபடியும் காலையில்போல் மங்களாசாஸனம் செய்தருளினார். அன்று ராத்ரி புறப்பட்டு 9மைல் தூரத்திலுள்ள புலியூர் குறிச்சி அக்ரஹாரத்திற்கெழுந்தருளினார். அவ்வூருக்கு ஸமீபத்தில்தான் பழைய ராஜாக்கள் வஸித்த பத்மநாபபுரம் கோட்டை இருக்கிறது. அது கருங்கல்லால் வெகு விசாலமாக கட்டப்பட்ட கோட்டை. மார்த்தாண்டவர்மா என்கிற ராஜாவின் காலத்தில் அவரிடம் விச்வாஸத்தோடு தொண்டுசெய்து வந்த டச்சுக்காரன் டணையன் கோட்டையுமிருக்கிறது. அங்கிருந்து புறப்பட்டு மறுநாள் அதாவது— 24-4-54 காலை திருவண்பரிசாரமெழுந்தருளியாயிற்று. மஹாராஜாவின் கொட்டாரத்தில் எழுந்தருளியிருந்தார். திருவாழ்மார்பன் ஸன்னிதி அதிகாரிகளால் ப்ரார்த்திக்கப்பட்டு ஸன்னிதிக்கெழுந்தருளி பல்லாண்டு தொடங்கி 'அங்குமிங்கும்' என்கிற திருவாய்மொழியை அநுஸந்தித்து அதில் 'வருவார் செல்வார்' என்கிற பாசுரத்

தை இரட்டித்து அநுஸந்தித்து மங்களாசாஸனம் செய்தருளியாயிற்று. அவ்விடத்தில் திருக்குறுங்குடியிலிருந்து ஸ்ரீக்ருஷ்ணய்யங்கார் முதலியவர்கள் வந்து திருக்குறுங்குடிக்கெழுந்தருளும்படி ப்ரார்த்தித்தார்கள். பணைகுடியில் ஸ்ரீ பி. கே. சுப்பய்யாபிள்ளை என்பவர் 27–4–54ல் பணைகுடிக்கெழுந்தருளவேண்டுமென்றும் ப்ரார்த்தித்தார். 25, 26ந்தேதி வரைக்கும் திருவண்பரிகாரத்திலிருப்பதாகத் திருவுள்ளம்பற்றியாயிற்று. அவ்விடமெழுந்தருளியிருந்த நாளில் நாகர்கோயிலிலிருந்து சிலர் வந்து ஸமாச்ரயணம் பண்ணிக்கொண்டார்கள். 26–4–54 காலை மறுபடியும் திருவாழ்மார்பனை முன்போல் மங்களாசாஸனம் செய்தருளியாயிற்று. அன்று ராத்ரி புறப்பட்டு பணைகுடி எழுந்தருளி பணைகுடியில் நம்பிநரஸிம்ஹன் ஸந்நிதியில் எழுந்தருளியாயிற்று. ஸ்ரீசுப்பய்யாபிள்ளை காணிக்கை ஸமர்ப்பித்தார். அங்கும் திருக்குறுங்குடியிலிருந்து சிலபேர்வந்து ஸ்ரீ அழகியசிங்கரை தெண்டன் ஸமர்ப்பித்து தம் ஊருக்கெழுந்தருளும்படி ப்பார்த்தித்தார்கள். அன்று ராத்ரி புறப்பட்டு 8 மைல் தூரத்திலுள்ள திருக்குறுங்குடிக்கெழுந்தருளியாயிற்று. ஊர்வாஸிகள் ஊர் ஆரம்பத்திலேயே பூர்ணகும்பங்களுடன் வந்து வீதிவலமாக எழுந்தருளப்பண்ணிக்கொண்டுபோனார்கள். பெருமாள் ஊரிலுள்ள ஸ்ரீ அஹோபில மடத்திற்கு எழுந்தருளினார். 28–4–54 காலை கோயிலிலிருந்து ஸ்ரீ ஜீயர் மடத்து அதிகாரி ஸ்ரீ அழகியசிங்கா நம்பி ஸந்நிதியில் மங்களாஸாஸனத்திற்கு எழுந்தருளவேணுமென்று ப்ரார்த்தித்தார். எல்லாருடைய பிரார்த்தனையின் பேரில் தந்தப் பல்லக்கில் ஸ்ரீ அஹோபிலமடத்திலிருந்து வீதிவலமாய் எழுந்தருளியாயிற்று. ஸந்நதித்தெரு கோடியில் அரவணை கொண்டுவந்து ஸ்ரீ அழகியசிங்கரை கோயில் பரிஜனங்களும் ஜீயர் மடத்து அதிகாரிகளும் எதிர்கொண்டழைத்துப் போனார்கள். ஸ்ரீ அழகியசிங்கர் கோயில் வாசல் போனதும் பல்லக்கிலிருந்து இறங்கி நம்பிஸந்நிதிக்கு எழுந்தருளியாயிற்று. த்வஜஸ்தம்பத்தடியில் உள்ளிருந்து ஸ்ரீசடாரியை தீர்த்தம், மாலை, பரியட்டத்துடன் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வந்தார்கள். த்வஜஸ்தம்பத்தை ஸ்ரீ அழகியசிங்கர் தெண்டன் ஸமர்ப்பித்தார். அருளிப்பாட்டுடன் மாலை, பரியட்டம், அபயஹஸ்தம், ஸ்ரீசடாரி, இடுக்கு திருத்துழாய் மரியாதைகளைப் பெற்றுக்கொண்டு உள்ளே எழுந்தருளினார். உள்ளே எழுந்தருளி நம்பியை எங்ஙனே, உகந்த திருவாய்மொழியை அநுஸந்தித்து, மங்களாசாஸனம் செய்தாயிற்று. நம்பிக்குப் பொன்னுடையும் ஸமர்ப்பித்தாயிற்று. பிறகு அருளிப்பாட்டுடன் மாலை, பரியட்டம், தீர்த்தம், சடாரி, திருத்துழாய் முதலானதும் பெற்றுக்கொண்டு பெருமாள் நியமனத்தின் பேரில் கர்ப்பக்ருஹத்துக்குள்ளே எழுந்தருளி திருவாலவட்ட கைங்கர்யம் செய்துகொண்டு ஸ்தோத்ரங்களை அநுஸந்தித்து ஸேவித்தருளினார். அங்கிருந்து ப்ரதக்ஷிணமாக எழுந்தருளி கிடந்த நம்பி, வீற்றிருந்த நம்பியையும் மங்களாசாஸனம் செய்துவிட்டு ஸ்ரீபலிமண்டபப்ரதக்ஷிணமாக கைசிகஏகாதசி மண்டபத்தையும் ஸேவித்துக்கொண்டு, காண்டமடு பொய்கையின் கரையிலுள்ள கண்ணனையும் ஸேவித்துவிட்டு, அப்பொய்கையில் இறங்கி ப்ரோக்ஷணம் செய்துகொண்டு ஸ்ரீஸந்நிதி மண்டபம் ப்ரதக்ஷிணமாக எழுந்தருளினார். அவ்விடம் கோயில் கம்பங்களையும், கோபுரத்தில் உள்ள சிற்பங்களையெல்லாம் எடுத்துச்சொல்லக் கேட்டு ஸந்தோஷமடைந்தாயிற்று. மணவாளமாமுனிகள் ஸந்நிதிக்கும் எழுந்தருளவேண்டுமென்று ப்ரார்த்தித்ததின் பேரில் அங்கும் எழுந்தருளியாயிற்று. அங்குள்ள நம்பிகளில் ஜீயர்மடத்தில் ஆராதனத்திலுள்ள நம்பியையும் மங்களாசாஸனம் செய்தருளும்படி ஜீயருடைய அபிப்பிராயமென்று மடத்திலுள்ளவர்கள் ப்ரார்த்தித்ததின் பேரில் அங்கு எழுந்தருளியாயிற்று. ரொம்பவும் வயோவ்ருத்தரான ஜீயர் ஸ்ரீ அழகியசிங்கரை ஸ்வாகதம் சொல்லி வரவேற்று, நம்பியின் பவித்திரமாலையையும் ஸ்ரீ அழகியசிங்கருக்கு ஸமர்ப்பித்து கூடவே உள்ளேஎழுந்தருளப்பண்ணிக்கொண்டு போய் அந்த நம்பியையும் மங்களாசாஸனம் செய்யும்படி செய்

வித்து ப்ரதக்ஷிணமாக அழைத்து வந்து ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளி மங்களாசாஸனம் செய்ததின் ஸந்தோஷத்தை எடுத்து ஸாதித்தார். ஸ்ரீ அழகியசிங்கரும் அவருடைய ஸஹ்ருதயதையையும், அவரால் விசேஷ கைங்கர்யங்கள், மண்டபம் முதலியவை செய்யப்பட்டிருப்பதைக் கொண்டாடியருளினர். அவ்விடமிருந்துபுறப்பட்டு வீதிவலமாக மடத்திற்கு எழுந்தருளியாயிற்று. திருக்குறுங்குடியில் 3 நாள் ஊரிலுள்ளவர்கள் விசேஷ ததீயாராதனையுடன் ஸ்ரீ அழகியசிங்கரை ஆராதித்தார்கள். இந்த மூன்று தினங்களிலும் ஊரில் விசேஷமாய் ஸமாச்ரயணபரந்யாஸங்கள் செய்துகொண்டார்கள். மறுநாளும் ஸ்ரீநம்பிஸன்னிதிக்கு எழுந்தருளி மங்களாசாஸனம் செய்தருளியாயிற்று. ஸாயங்காலம் ஸ்ரீபாஷ்யகாரர் ஸன்னிதிக்கு எழுந்தருளி அவரை ஸேவித்துவிட்டு திருப்பாற்கடல் நம்பியையும் மங்களாசாஸநம் செய்தருளினர். அதற்கு மறுநாள் த்வாதசி தினம் விசேஷ ததீயாராதனம் நடந்தது. அன்று பாரணையானதும் அங்கிருந்து புறப்பட்டு மலைமேல் நம்பியையும் மங்களாசாஸனம் செய்தருளியாயிற்று. மலையில் கோயில் ஸமீபம் சென்றதும் கோயில் கைங்கர்யபரர்கள் வாத்யத்துடன் ஸ்ரீ அழகியசிங்கரை தெண்டன் ஸமர்ப்பித்து ஸன்னிதிக்கு எழுந்தருள ப்ரார்த்தித்தார்கள். ஸ்ரீ அழகியசிங்கரும் நம்பி ஸன்னிதிக்குள் எழுந்தருளி மங்களாசாஸனம் செய்தபின், ஸன்னிதியில் கொடுக்கப்பட்ட ப்ரஸாதங்களை கோஷ்டிகளுக்கு விநியோகம் செய்ய நியமித்து விநியோகமான பின் திருக்குறுங்குடிக்கு எழுந்தருளினர். திருக்குறுங்குடியில் ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளியிருந்த தினமெல்லாம் ஸ்ரீ ஸன்னிதியிலிருந்து காலையில் விச்வரூபம் ஆனவுடன் மாலை, தீர்த்தம், ப்ரஸாதம் முதலியவைகள் ஸ்ரீ அஹோபிலமடத்திற்கு அனுப்பப்பட்டு வந்தன. தவிர மத்யாஹ்னத்திலும் ப்ரஸாதங்களும், ராத்திரியும் மாலை, தீர்த்தம், திருப்பணியாரம் முதலானதுகளும் ப்ரதிதினமும் கொண்டு கொடுக்கும்படி ஸ்ரீ ஜீயரால் நியமிக்கப்பட்டு அதே மாதிரி நடந்து வந்தது. திருப்பாற்கடல் ஸன்னிதி மலைமேல்நம்பி முதலான ஸன்னிதிகளுக்கும் ஸ்ரீ அழகியசிங்கர் மங்களாசாஸனம் செய்ய எழுந்தருளும்போதும் அதே மாதிரி செய்யப்பட்டிருந்தது. ஸ்ரீ ஜீயர் ஸ்வாமி ஸ்ரீ அழகியசிங்கரிடம் பஹுமானமும், ப்ரீதியும் கொண்டு, தான் வேறு; ஸ்ரீ அழகியசிங்கர் வேறு என்று நினையாமல், பெருமாளை மங்களாசாஸனம் பண்ணும்படி செய்திருந்தவைகளைப் பார்த்துத் திருக்குறுங்குடியில் உள்ள அனைவரும் ரொம்ப ஸந்தோஷப்பட்டார்கள். ஸ்ரீ ஜீயரும் ஒரு நாளைக்கு வேண்டிய ததீயாராதனைக்கு 101 ரூபாயும் வேண்டிய ஸாமக்ரிகளும் தன்னுடையதாய் இருக்க வேண்டுமென்று ஸமர்ப்பித்தார்.

ஸ்ரீ அழகியசிங்கர் 2–5–54 ஞாயிற்றுக்கிழமை ஸாயங்காலம் அவ்வூரிலுள்ளவர்களின் ப்ரார்த்தனையின் பேரில் பாஷ்யகாரருடைய பெருமையையும் வர்ணாச்ரமதர்மங்களின் ஆவச்யகதையையும் முக்யமாக சிகாயஜ்ஞோபவீதஸந்த்யாவந்தநாதிகளின் ஆவச்யகதையையும் ஸ்ரீவைஷ்ணவனுடைய ஆசாரத்தையும் உபந்யாஸம் செய்தருளினர். அன்று ஸாயங்காலம் பானகாராதனமானதும் நம்பி ஸன்னிதிக்கெழுந்தருளி மங்களாசாஸனம் செய்துவிட்டு நம்பியிடம் நியமனம் பெற்றுக்கொண்டாயிற்று. நியமனம் பெற்றுக்கொண்டு அன்று ராத்ரி புறப்பட்டு 8 மைல் தூரத்திலுள்ள நாங்குனேரிக்கு எழுந்தருளியாயிற்று. ஸ்ரீ அழகியசிங்கர் திருக்குறுங்குடிக்கெழுந்தருளியானதும் நாங்குனேரியிலிருந்து ஸ்ரீஜீயரின் கைங்கர்யபரர்கள் நாங்குனேரிக்கு எழுந்தருளவேண்டுமென்றும் அவ்விடம் மேல்பக்கம் ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் ஸன்னிதி ஸ்ரீ அழகியசிங்கர் பெருமாளுடன் எழுந்தருள ஸ்ரீஜீயர்நியமனத்துடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாகவும் ப்ரார்த்தித்தபடி ஸ்ரீ ஸ்ரீனிவாஸன் ஸன்னிதிக்கெழுந்தருளியாயிற்று. அந்த இடத்தில் விசேஷ பந்தல் போட்டு விளக்குகள் முதலான அலங்காரங்கள் பண்ணி ஸ்ரீஸன்னிதி அதிகாரி ராத்ரியே ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளுவதை ப்ரதீக்ஷித்திருந்தார். ஸ்ரீ அழகியசிங்கரை எதிர்கொண்டழைத்து வேண்டிய இடவஸதிகளைச் செய்து

199547

கொடுத்தார். மறுநாள் அபிகமனமானதும் ஸ்ரீ ஸந்நிதிக்கெழுந்தருளவேண்டுமென்று கோயில் துரையார் ப்ரார்த்தித்ததின்பேரில் ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் ஸன்னிதியிலிருந்து தந்தப்பல்லக்கில் ஸகலபிருதுகளுடனும் வாத்யகோஷங்களுடனும் வீதிவலமாககோயிலுக்கெழுந்தருளியாயிற்று. வடக்கு மடவிளாகம் மூலையில் அரவணை வந்தது. அரவணை பரியட்டங்களைப் பெற்றுக்கொண்டு கோபுரவாசலில் பல்லக்கைவிட்டு இறங்கி எழுந்தருளினார். த்வஜஸ்தம்பத்தடியில் ஸ்ரீசடாரி மாலை பரியட்டம் திர்த்தம் ப்ரஸாதமானதும் உள்ளே எழுந்தருளி ஸ்ரீதோதாத்ரிநாதனை "நோற்றநோன்பிலேன்" என்கிற பாசுரங்களால் மங்களாசாஸனம் செய்தருளியாயிற்று. தாயாருக்கு விசேஷ பட்டு சேலையையும், பெருமாளுக்கு தகடியையும் ஸமர்ப்பித்தாயிற்று. பிறகு அருளிப்பாடுடன் மாலை பரியட்டம் ஸ்ரீசடாரி திருத்துழாய் தீர்த்தம் முதலானதுகள் ஆனபிற்பாடு மூலவர் ஸன்னிதிக்குள்ளெழுந்தருளி மறுபடியும் மூலவரை மங்களாசாஸனம் செய்து பிறகு பெருமாள் நியமனத்தின்பேரில் திருவாலவட்டம் கைங்கர்யம் செய்து ஸ்ரீபலிமண்டபம் ப்ரதக்ஷிணமாக மாலை பரியட்டங்களுடன் ராமாநுஜகூடத்திற்கெழுந்தருளியாயிற்று. அவ்விடமெழுந்தருளியதும் கூடவந்த கோயில்கைங்கர்யபரர்களுக்கும் மற்றுமுள்ளவர்களுக்கும் சந்தநதாம்பூலங்கள் வழங்கப்பட்டு ஸ்ரீநிவாஸன்ஸன்னிதிக்கு எழுந்தருளினார். ஷை ஸன்னிதி கைங்கர்யபரர்கள் மறுநாள் காலையிலும் மங்களாசாஸனத்திற்கு எழுந்தருளவேணுமென்று ப்ரார்த்திக்க, அன்று காலை அபிகமனமானதும் ஸன்னிதிக்கெழுந்தருளியாயிற்று. எழுந்தருளும்போது உடையவர் ஸன்னிதி வாசலில் ஜீயர் ஸ்வாமிகள் ஸ்ரீ அழகியசிங்கரை குசலப்ரச்நம் பண்ணிவிட்டு பெருமாளை மங்களாசாஸனம் செய்துவிட்டு மடத்திற்கு எழுந்தருளவேணுமென்று ஸாதித்துவிட்டு மடத்திற்கெழுந்தருளினார். ஸ்ரீ அழகியசிங்கரும் தோதாத்ரிநாதனை மங்களாசாஸனம் செய்து எண்ணெய்க்காப்பு ஸமர்ப்பிப்பதை ஸேவித்துவிட்டு முன்தினம்போல் தீர்த்தம் பரியட்டம் மாலை முதலானதுகளைப் பெற்றுக்கொண்டு ஸ்ரீஸன்னிதி ப்ரதக்ஷிணமாக எழுந்தருளி, எண்ணெய்க்கிணறைக் கடாக்ஷித்துவிட்டு ஜீயர் மடத்திற்கு எழுந்தருளியாயிற்று. ஜீயரும் ஸ்வாகதம் செய்து வரவேற்று அரங்கநகரப்பன் மடத்திற்கு வந்த விவரத்தை ஸாதித்து மங்களாசாஸனம் செய்வித்து கனுவன்று தோதாத்ரிநாதனும் வரகுணமங்கைத்தாயாரும் மடத்திற்கெழுந்தருளி விசேஷ உத்ஸவம் கண்டருளுவதையும், ஸ்வயம் வ்யக்தத்தில் சேர்ந்த இந்த க்ஷேத்ரத்தில் நம்மாழ்வாரின் விசேஷஈடுபாட்டையும் ஸ்ரீ அழகியசிங்கர் இந்த க்ஷேத்ரத்திற்கெழுந்தருளி மங்களாசாஸனம்செய்தருளியது மிக ஸந்தோஷமென்றும் 'ஸதாம் ஸத்பிஸ்ஸங்க:' என்றதை எடுத்துக்காட்டி ஸாதித்தாயிற்று. பிறகு ஸ்ரீ அழகியசிங்கரை எழுந்தருளியிருக்கச்செய்து மடத்தின் கைங்கர்யமாக தோதாத்ரிநாதனுக்கு ஏற்பட்டிருக்கும் திருவாபரணங்கள், தங்கக்குடம்முதலானவைகளை ஒவ்வொன்றாக எடுத்துக்காட்டி ஸ்ரீ அழகியசிங்கர் கடாக்ஷிக்கவேணுமென்று ஸாதித்தபடி ஸ்ரீ அழகியசிங்கரும் ரொம்பவும் உகப்போடு கடாக்ஷித்து ஸ்ரீநிவாஸன் ஸன்னிதிக்கெழுந்தருளியாயிற்று. ஸ்ரீ அழகியசிங்கரிடம் லக்ஷ்மீந்ருஸிம்ஹனை மங்களாசாஸனம் செய்ய எழுந்தருளுவதாக ஸாதித்தபடி 7-30 மணி ஸுமாருக்கு (நித்யாநுஸந்தானம் வேதபாராயணம் சாற்றுமறை முடியும் ஸமயம்) ஜீயர் எழுந்தருளினார். அச்சமயம் அவ்வூர் ஜனங்கள் பூராவும் ஸேவிப்பதற்காக வந்திருந்தனர். ஸ்ரீ அழகியசிங்கரும் ஜீயரை ஸ்வாகதத்துடன் வரவேற்று லக்ஷ்மீந்ருஸிம்ஹனை மங்களாசாஸனம் செய்து வைத்தாயிற்று. பெருமாளை ஸேவித்துவிட்டு தான் பூர்வாச்ரமத்தில் திருக்குடந்தை அழகியசிங்கர் காலத்தில் நரஸிம்ஹபுரத்திலும், மன்னார்குடி அழகியசிங்கர் காலத்தில் மன்னார்குடியிலும், 40-வது பட்டம் அழகியசிங்கர் காலத்தில் கத்வாலிலும், 41-வது பட்டம் அழகியசிங்கர் காலத்தில் வானமாமலையிலும், 41, 42-வது பட்டம் அழகியசிங்கர்கள் காலத்தில் (ஸ்ரீரங்கத்திலும்) கோயிலிலும் தான் இந்த துரீயாச்ரமத்தில் இந்த அழகிய

சிங்கர் காலத்தில் இவ்வூரிலேயே பெருமாள் ஸேவை ஸாதித்தார் என்றும் தன் பாக்ய விசேஷமென்றும் ஸாதித்தாயிற்று. பெருமாளின் மஹிமையையும், ஸ்வர்ண அழகியசிங்கரின் மஹிமையையும் ஸ்ரீ அழகியசிங்கர் ஜீயருக்கு ஸாதித்தாயிற்று. பிறகு ஜீயர் நாளைய தினம் தோதாத்ரிநாதன் 1 கோட்டை எண்ணெய் திருமஞ்சனம் கண்டருளப்போகிறுர். ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளி ஸேவிக்கவேண்டுமென்று ஸாதித்துவிட்டு தன் மடத்திற்கு எழுந்தருளினுர்.

5–5–54 அபிகமனமானதும் ஸன்னிதிக்கு எருந்தருளி எண்ணெய்க் காப்பு திருமஞ்சனத்தை ஸேவித்துவிட்டு திரும்பி எழுந்தருளினுர். திருமஞ்சனத்தின்போது ஜீயருமெழுந்தருளியிருந்தார். அன்று விசேஷமான சந்தனக்காப்பு ஸமர்ப்பிக்கப்போவதையும், ராத்திரி கருடவாஹனத்தில் வீதி புறப்பாடு உண்டென்றும் ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளி மங்களாசாஸனம் செய்தருளவேண்டுமென்றும் ஸ்ரீஸன்னிதி கைங்கர்யபரர்கள் ப்ரார்த்தித்தார்கள்.

ஸ்ரீ நாங்குநேரி (வானுமாமலை) ஜீயர் முதல் நாளே ஒரு கோட்டை அரிசியும் ரூபாய் 225ம் ததீயாராதனைக்கும் உபயோகப்பட வேண்டும் என்று ஸமர்ப்பித்தார்.

5–5–54 விசேஷஎண்ணெய்க்காப்புதிருமஞ்சனம் நடந்தது. காலையில் அபிகமன ஆராதனம் ஆனவுடன் ஸ்ரீ அழகிய சிங்கர் தன்னுடைய பிருது களுடனும் பரிவாரங்களுடனும் கோயிலுக்கு எழுந்தருளி யாயிற்று. கோயிலில் பெருமாளை மங்களாசாஸனம்செய்தபிறகு ஜீயரும் எண்ணெய்க்காப்பு திருமஞ்சனத்தை ஆரம்பித்து தானும் கூடவிருந்து ஸேவைபண்ணிவைத்தார். ஸஹஸ்ர சங்காபிஷேகம் கும்பாபிஷேகங்கள் ரொம்ப நாழிகை ஆகுமென்று தெரிந்தபடியால், எண்ணெகாப்பு, பால், தயிர் முதலிய திருமஞ்சனங்கள் ஆனபிற்பாடு ஸ்ரீ அழகியசிங்கர் ஸன்னிதிக்கு எழுந்தருளியாயிற்று. அவ்வூரிலுள்ள மடத்தைச் சேர்ந்தவர்களான சில வித்வான்கள் ஸ்ரீ அழகியசிங்கரை தண்டன் ஸமர்ப்பிக்க வந்தார்கள். சில விஷயங்களை அவர்களை சொல்லச் சொல்லிக் கேட்டுவிட்டு யதோசிதம் ஸம்பாவனை செய்தருளியாயிற்று.

அன்று ராத்திரி ஆராதனங்கள் ஆன பிற்பாடு ஸஞ்சாரத்திற்காக ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கும் காலத்தில், ஸ்ரீ தோதாத்ரிநாதனுடையசந்தனக்காப்பையும், கருடோத்ஸவத்தையும் ஸேவித்துவிட்டுஎழுந்தருளவேணுமென்று கோயில் கைங்கர்யபரர்கள ப்ரார்த்தித்ததின் பேரில் தோதாத்ரிநாதன் ஸன்னிதிக்குள் எழுந்தருளி, மூலவரை நன்றுக ஸேவித்துவிட்டு புறப்பாட்டுக்குக் கொஞ்சம் நாழிகையானபடியால் ராமாநுஜகூடத்தில் எழுந்தருளியாயிற்று. பெருமாள் புறப்பாட்டுக்கு ஸன்னத்தராய் எழுந்தருளியிருந்த ஸமயம் தெரிந்ததும் பெருமாளை ஸேவிக்க வாகன மண்டபத்திற்கு எழுந்தருளியாயிற்று. ஸ்ரீ ஜீயரும் அவ்விடம் எழுந்தருளி ஸ்ரீ அழகியசிங்கரை ஸமீபத்தில் எழுந்தருளி மங்களாசாஸனம் செய்யும்படி ஸாதித்தார். பெருமாள் கருடவாஹனத்தில் எழுந்தருளியிருந்தார். தாயார் கஜேந்த்ரஸமேதபத்மத்தோடு உள்ள கல்பதருவாஹனத்தில் எழுந்தருளியிருந்தார். தாயாரையும், பெருமாளையும் ஸமீபத்தில் எழுந்தருளி ஸேவித்து விட்டு ஜீயருடன் பெருமாளுடைய குணங்களை ஸாதித்துக்கொண்டிருக்கும் பொழுது ஜீயரும் ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளியிருந்த 3 நாளும் ஒரு பெரிய உத்ஸவகோலாஹலமாக இருந்ததென்றும், ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளிய பிறகு, வெறிச்சாப்போலிருக்கும் என்று சொல்லி, '*ஸதாம் ஸத்பிஸ்ஸங்க:' என்ற ச்லோகத்தைச்சொல்லி ஸதாம்– ஒருஇடத்தில்இருப்பதாய்இருப்பவர்களுக்கு, ஸத்பி: – வந்தவர்களான ஸத்துக்களாலேற்படும், ஸங்க: – சேர்க்கை என்றி தான்

அர்த்தம் அபிப்ராயப்பட்டிருப்பதால் அதற்கேற்ப ஸ்ரீ அழகியசிங்கர் ஸஞ்சாரக்ரமத்தில் ஸமாகமம் நேர்ந்தது இந்த ச்லோகத்திற்கு ரொம்பவும் பொருத்தமென்பதாக ஸாதித்தாயிற்று. பெருமாள் புறப்பாடு ஆகி கோபுரவாசலுக்கு எழுந்தருளினதும் கோபுரவாசலில் இடது புறத்தில் ஜீயர் இருந்துகொண்டு, அதற்கு நேராக வலதுபுறத்தில் ஸ்ரீ அழகியசிங்கரை இருக்கும்படி ஸாதித்து கற்பூர ஹாரத்தி ஆனதும் சதுரத் தேங்காயால் ஸ்ரீ அழகியசிங்கர் கையில் கொடுத்து சேர்ந்து உடைக்கும்படி ஸாதித்தாயிற்று.

பெருமாள் கோபுரம் தாண்டி வெளியில் எழுந்தருளியதும் ஜீயரிடம் பெருமாள் ராத்ரி சஞ்சாரமாய் எழுந்தருளுகிறார் என்று தெரிவித்தபோது மறுபடி இந்தமாதிரி ஸமயம் நேரவேண்டும் என்று ஸாதித்தார்.

ஸ்ரீ அழகியசிங்கர் மற்றுமொருதரம் உபகாரம் ஸமர்ப்பித்து பெருமாள் தாயாரை ஸேவித்துக்கொண்டு நியமனம் பெற்றுக்கொண்டு ஸ்ரீஸந்நிதிக்கு எழுந்தருளியாயிற்று

ஸ்ரீ அழகியசிங்கர் திருமஞ்சனத்திற்காக ஒருடின் எண்ணெய்யும் விசேஷசக்கரைப்பொங்கல் தளிகையும் ஸ்ரீ தோதாத்ரிநாதன் கண்டருளும்படி செய்தாயிற்று. ஜீயரும் ஸ்ரீ அழகியசிங்கரும் ஸஹ்ருதயமாகப் பழகினதையும் பகவத்குணங்களையும் ஒருவருக்கொருவர் புகழ்ந்து அனுபவித்தரீதியையும் பார்த்து அவ்வூரிலுள்ள அனைவரும் பரமானந்தத்தோடு இந்த சேர்த்தியை ஸேவிக்க நாங்கள் பரம பாக்யம் பண்ணினோமென்று வாயாரச்சொல்லி மகிழ்ந்தார்கள்.

அன்று ராத்திரி 1 மணி ஸுமாருக்குப்புறப்பட்டு காலையில் 10 மைலுள்ளமுலகரப்பட்டிக்கு எழுந்தருளினார்.

(தொடரும்)

ஸ்ரீ:

அட்டைப்படவிளக்கம்

निरन्तरं निर्विशतस्त्वदीयमस्पृष्टचिन्तापदमाभिरूप्यम् ।
सत्यं शपे वारणशैलनाथ वैकुण्ठवासेऽपि न मेऽभिलाषः ॥

[ஹே! வாரணசைலநாதனான வரதனே! (உன்னை) ஸேவிக்குமவர்களுக்கு சிந்தையைத்தொட்டுப்பார்க்காததான உமது ஆபிரூப்யத்தை (திருமேனி ஸௌந்தர்யத்தை) இடைவிடாது அநுபவித்துவரும் எனக்கு வைகுண்டவாஸத்தில்கூட ஆசை கிடையாது. இது ஸத்யம். சபதம் செய்கிறேன்.] என்று ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகனால் வைகுண்ட வாஸத்தைவிட திவ்யமங்கள விக்ரஹத்தினுடைய நித்யாநுபவமே உயர்ந்ததாகப்பேசப்பட்ட ஸ்ரீதேவாதிராஜன் அழகிய திருக்கோலத்துடன் இம்மாத அட்டையில் விளங்குகிறான். மிகப்ரஸித்தமான வைசாகோத்ஸவம் 16-5-54 முதல் 25-5-54 வரை நடைபெறுகிறது. 18-5-54 கருடோத்ஸவம். பக்தகோடிகளனைவரும் திரள்திரளாகச்சென்று ஸேவித்து இன்புறவேண்டியதவச்யம்.

அங்கு பாகவதோத்தமர் குழாங்களுடன் சேர்ந்து ஒவ்வொரு வேளையிலும் அவ்வெம்பெருமான் வெவ்வேறு திருக்கோலங்கள் பூண்டு யானை பரி தேர்களில் பவனி வருவதைக் கண்டு களித்துப்பல்லாண்டு பாடி அநுபவிப்போமாக.